8

ஜகன்மோகினி

ஜனவரி இதழில்

புதிய எழுத்தாளர்கள்.
அரிய அம்சங்கள்.
சுமார் 10 படங்கள்.
48 பக்கங்கள்.
விலை அணா 4
விவரங்களை உள்ளே காணவும்

ஜகன்மோகினி
அவதாரத்தில் பகவான்
தேவர்களுக்கு அமிருதத்தை
அளித்தார்.

ஜகன்மோகினி
ரூபத்தில் தமிழ்த்தாய்
இணையற்ற தமிழ் அமுதை
உங்களுக்கு அளிக்கின்றாள்.

20—12—43 வரை

நேயர்களின் வேண்டுகோளுக்குஇணங்கி மலரின் விலை நவம்பர் திட்டப்படியே நீடிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 2—8 தான். ஷை தேதிக்குப்பிறகு, ரூ. 3/- உடனே முந்துங்கள்.

அ[illegible] இதழில்
வை[illegible]து நாவல்
இதய ஒலி

N43.20.12
183086

Vol. 20. No. 12. சுபானு
DEC. 1943. கார்த்திகை
ஆசிரியை-
வை. மு. கோதைநாயகி அம்மாள்

க்ஷேமலாபங்கள்

எம்பெருமானின் க்ருபாகடாக்ஷத்தினுலும், உங்களுடைய பேராதரவாலும், அறிஞர்களின் ஆசியினுலும் மோகினிக்கு 20 ஆண்டுகள் இனிது பூர்த்தியாகி, நாளது ஜனவரியில் 21-வது ஆண்டு மங்களகரமாக ஆரம்பிக்கிறது.

மோகினி அன்பர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி. மதுரகீதத்தை நீங்கள் எவ்வளவு அன்வயித்து ரஸித்து வருகிறீர்களென்பது உங்களில் பலரிடமிருந்து வந்துள்ள கடிதங்களிலிருந்து அறிந்து ஆனந்தப்படுகிறேன். மதுரகீதம் உங்கள் இதயத்தில் என்றும் ஒலித்துக்கொண்டிருக்குமென்பதற்கு அறிகுறியாக அடுத்த நவீனம் இதய ஒலி என்னும் மகுடத்துடன் ஜனவரி இதழில் ஆரம்பமாகிறது.

புதிய ஆண்டில் பல புதிய அம்சங்கள் உங்களைப் பரவசமூட்டும். அதிகரித்த பக்கங்களுடன், பல படங்களுடன், ரஸமான கட்டுரைகளும், கதைகளும், 'இதய ஒலி'யுடன்கூடப் பிரகாசிக்கும்.

இதய ஒலி

கருணை, பச்சாத்தாபம், தருமசிந்தை முதலியன நிரம்பியுள்ள பவித்ரமான இதயத்தில் சதா ஒலித்துக்கொண்டிருக்கும் நாதம் எது?... 'கொடுத்த வாக்கை மறக்காதே... ஆபத்தில் உதவு. ஏழைகளிடத்தில் அன்பு காட்டு, கடமையில் தவறாதே. தெய்வபக்தியும் ஆசாரிய பக்தியுமே உனது ஆத்மா கடைத்தேற வழி காட்டும் தோணியாகும்' என்கிற அத்புத மந்திரம் போன்றவைகளே ஒலிக்கும்... அன்பற்று, பசையற்று வரண்ட பாலைவனம்போன்ற சூனிய இதயத்தில் ஒலிப்பது எது?

பயங்கர எண்ணங்களும் சூழ்ச்சிகளுமேயாகும்...... அபலையான 'நிருபமா' யார்?...... மரணத்தறுவாயில் அவள் பிதா கூறிய வார்த்தைகள் என்ன? நாகரீக நங்கையாகிய 'லலிதா' யார்?...'காப்டன் காந்தன்' யார்?...புண்யமூர்த்தி யார்...மகத்தான தீ விபத்தில் சிறிதும் தயங்காது த்யாகாக்கினியில் குளித்து புனித இதயத்துடன் உதவி புரிய முன்வரும் அபூர்வ சக்தி வாய்ந்தவர் யார்? ஏழைத உயிலைக் கிழித்த மூர்க்கன் யார்? தொடர்ந்து படியுங்கள்.

---

(1) ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்-"பொங்கல்" (படத்துடன்)
(2) பி. ஸ்ரீ. ஆசார்யா — இலக்கியம். (படத்துடன்)
(3) ராஜசூடாமணி — கவிதை. (படத்துடன்)
(4) வி. ஆர். எம். செட்டியார்-கவிதா விமரிசனம். (படத்துடன்)
(5) "நைத்ரபர்" — வேதகாலத்திய நாடகம். (படத்துடன்)
(6) வித்வான் வெங்கடகிருஷ்ணன்—இலக்கிய ஆராய்ச்சி:
(7) வை. மு. ஸ்ரீநிவாஸன் — தொடர் கதை. (படத்துடன்)
(8) "நித்யானந்தர்" — நீங்கள் கொண்டாடுவது. (படம்)
(9) குகப்ரியை — சங்க காலப் பெண்மணிகள்
(10) எஸ். அம்புஜம்மாள் — "நம் சகோதரிகளுக்குமட்டும்"—?
(11) ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன் — சிறு கதை.
(12) ரங்கப்ரியை — ஒரு பக்கக் கதை.
(13) "விருச்சிகம்" — சித்திர ரகுனா. (படம்)

ஸ்ரீராமஜயம்.

சுபாநுவருஷ கார்த்திகைமீ

டிஸம்பர் 1943

மலர் 20 இதழ் 12

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீராகவ கவி

JAGANMOHINI

Dec. 1943. Vol. 20. No. 12.

ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்

பி.ஸ்ரீ

1830 86.

வேதசாஸ்திர ஸாரங்களைக் கிரகித்து வாழ்க்கை மூலமாகவும் உபதேச மூலமாகவும் உபகரிக்கும் பக்தன் உபகாரம் செய்யும்போது எப்படியிருப்பான்? "உப்புப் போலிருப்பான்!" என்பது அனந்தாழ்வான் ஸூக்திரம்.

"உப்பில்லாப்பண்டம்"

"உப்பில்லாப் பண்டம் 'குப்பையிலே'": பக்தன் இல்லாத ஊரும் பயன் இல்லாதது. உப்பு, தான் அழிந்து மாறிச்சுவைதருகிறது பண்டபதார்த்தங்களுக்கு. வைஷ்ணவனும் உடல் பொருள் ஆவி அழிய மாறித் தான் செய்யும் உபகாரம் அல்லது கைங்கரியத்திற்குச் சுவைதருகிறனம்.

உப்பு முனைந்து நின்றல், உப்பு கெடுத்துவிட்டது!" என்று சொல்லுகிறார்கள்: உப்பு அழிந்து சுவை தரும்போது, "உப்பு சுவை தருகிறது!" என்று சொல்லாமல், "கறி சுவையாயிருக்கிறது!" என்றுதான் சொல்லுகிறார்கள். வைஷ்ணவனும் முனைந்து நின்றல், அந்த விளம்பரம் கைங்கரியத்தைக் கெடுத்து விடுகிறது: தொண்டன் தொண்டிலே தன்னை முழுக்க இழுக்கும்போதுதான், தொண்டு பரிமளிக்குமாம். ஆ! எப்படிப்பட்ட உயர்ந்த கைங்கரிய லட்சியத்தை உப்பு வைஷ்ணவனுக்குஉபதேசிக்கிறது! கைங்கரியமும் பக்தியுமில்லாத வாழ்வும் உப்பில்லாப் பண்டம்தான்!

கைங்கரியமும் உழைப்பும்

உண்மையில், கைங்கரியமே வைஷ்ணவனுடைய லட்சியம்: இதைக் காட்டிலும் உயர்ந்த லட்சியம் கிடையாது. நித்திய கைங்கரியம் செய்து நித்தியானந்தர்களாக வாழவேண்டுமென்றே பகவான் உடம்பையும் உள்ளத்தையும் கொடுத்திருக்கிறனென்பதும், இந்த உண்மையை அறிந்து வாழ்க்கையைக் கைங்கரியத்திற்கு ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ளாதவர்கள், ஆறுகடக்கக் கொடுத்த தெப்பத்தைக்கொண்டு ஆற்று வெள்ளத்தின் வழியே போய்ச் சமுத்திரத்திலே முழுகிப்போகிறவர்களை ஒத்தவர்களென்பதும், பிரபந்தங்களின் புதை பொருளாகிய ஒரு முக்கியமான கோட்பாடு.

ராமானுஜருடைய சிஷ்யர்களில் ஒருவர் ஓர் அரசனிடம் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். இவர் பெருமையை அறிந்தபின், அரசன் இவரிடம் வேலை வாங்காமலே சம்பளம் கொடுத்தானும். அதை வழக்கம்போல் பகவத் பாகவத கைங்கரியத்திற்காகக் குருமுன் வைத்தார் சிஷ்யர். மெய்வருந்தாமல் கிடைத்த

அந்தப் பொருள் கைங்கரியத்திற்கு உதவாதென்று புறங்கையால் தள்ளி விட்டாராம் குரு.

''நும் மெய்வருத் திக்கைசெய்(து) உய்ம்மினோ !''

என்ற நம்மாழ்வார் வாக்கின்படி உழைப்பின் அவசியத்தை ராமானுஜர் எவ்வளவு தெளிவாகக் கைங்கரிய நெறியிலே வற்புறுத்தியிருக்கிறார்! ''உடம்பை ஹிம்ஸிப்பது தவமன்று; உழைப்பையும் உழைப்பின் பயனையும் பகவத்பாகவத கைங்கரியமாக்குவதே தவம் !'' என்பது பாகவதர் கொள்கை.

ஒரு ஞான சாஸனம்

பெருமாளை ''உறங்கும் பெருமாள்'' என்றும், பாகவதரை ''உலாவும் பெருமாள்'' என்றும் கருதிப் பாகவத கைங்கரியம் பகவத் கைங்கரியத்தைக் காட்டிலும் சிலாக்கியமானதென்று சித்தாந்தம் செய்தவர்கள், பரோபகார ரூபமான லோக கைங்கரியத்தை மறந்துவிட்டார்களென்று சொல்லமுடியுமா? பகவானுடைய சரீரம் லோகமானதால், லோகத்திற்குச் செய்யும் தொண்டு சரீரியான பகவானுக்கு உகப்பு என்றே சொல்லவேண்டும். மேலும் ''உறங்கும் பெருமாள்'' அந்த யோக நித்திரையிலும் சிந்தை செய்வது லோகரட்சணம் தானே!

இப்படிப்பட்ட அன்புக் கடவுளை, நாமும் அன்பு மயமானால்தானே அடைய முடியும்! கைங்கரியமாகக் கனியாத அன்பும் அன்பாகுமோ? எனவே, பக்தன் எல்லாப்பிராணிகளுக்கும் சிநேகன்; தன்னுயிர்போல் மன்னுயிரைப் போற்றுவான். குரு அருளிய மந்திரத்தை, ''நான் நரகத்தை அடைந்தாலும், இந்த ஜனங்கள் பிழைத்துப் போகிறார்களல்லவா?'' என்று சகலரும் அறியும்படி ராமானுஜர் வெளியிட்டது, லோகோபகாரம் பரம பாகவத தர்மமென்பதை எவ்வளவு நன்றாக வெளியிடுகிறது! இதைக் கைங்கரிய நெறியிலே வைஷ்ணவத்திற்குப் பிராணாதாரமான ஞான சாஸனம் என்று சொல்லலாம்.

பேதம் கடந்த பெருநெறி

ஆம்: பேதம்பாராமல் கைங்கரியம் செய்வது உண்மையான வைஷ்ணவ தர்மம். பட்டர் என்ற ஆசாரியர் இல்லறத்திலிருந்தார். அவருடைய சிஷ்யரில் ஒருவர் சன்னியாசி. அந்தச் சன்னியாசி ஒருநாள் பல்லக்குப் போகிகளோடு சேர்ந்து குருவின் பல்லக்கைச் சுமக்க ஆரம்பித்தாராம். ''நீர் இது செய்யலாமா?'' என்று பட்டர் கேட்கச் சன்னியாசி, ''இந்த ஆச்ரமம் கைங்கரியத்திற்கு விரோதமானால், பழைய வெள்ளையைத்தானே உடுத்துக்கொள்வேன்!'' என்று விண்ணப்பஞ் செய்தாராம்.

வேறொரு ஆசாரியர், ''மிலேச்சனும் பக்தனானால், சதுர்வேதிகளும் (நாலு வேதங்களையும் அத்யயனம் செய்த பிராமணர்) அனுவர்த்திக்க (அனுசரிக்க; பின்பற்ற) அறிவு கொடுத்துக் குலதெய்வத்தோடொக்கப் பூஜைகொண்டு...'' என்று இவ்விதமாகச் சொல்லுகிறார். ''மிலேச்சன்'' என்றால், இங்கே ''தாழ்ந்தவன்; நாகரிகமற்ற புறநாட்டான்'' என்று பொருள்படும். இப்படிப்பட்டவனும் பக்தனானால், நாலு வேதங்களையும் அத்யயனம் செய்த பிராமணர்களும் பின்பற்றக்கூடிய ஞான தாதாவாக இருக்கும் யோக்கியதை வந்துவிடுகிறதாம். இவனை மிலேச்சன் என்று எண்ணவேகூடாது; பக்தன் என்று எண்ணினாலும் போதாது: குலதெய்வம் என்றே மதித்துப் பூஜிக்கவேண்டுமாம் அந்தச் சதுர்வேதிகளான பிராமணர்களும்!

குலமும் கொழுந்தும்

மதுர கவிகளும் நாதமுனிகளும் நம்மாழ்வாரைப் பூஜித்துப் பேறுபெற்றதும், திருப்பாணாழ்வாரைத் தோளிலே சுமந்து லோகசாரங்க முனிவர் பேறுபெற்றதும், பெரிய நம்பிகள் மாறனேர் நம்பிக்குக் கைங்கரியம் செய்ததும், பெரியாழ்வார் கட்டளைப்படி, ''பண்டைக்குலம்'' (பழைய ஜாதி) தவிர்ந்து ''தொண்டக்குலம்'' (அதாவது, தொண்டர் என்ற புதிய ஜாதியில்)—சேரும்படி ஆசையோடு வந்தவர்களையெல்லாம் ராமானுஜர் சேர்த்துக்கொண்டதும்,

கைங்கரியமே பெரிது" என்ற வைஷ்ணவக் கொள்கையைச் சந்தேக விபரீதங்களுக்கு இடமில்லாமல் வெளியிடுகின்றன அல்லவா?

பிறரை நிந்திப்பது கொலையென்றும், தன்னைப் புகழ்வது தற்கொலையென்றும் கருதியவர்களிடம் ஜாதித்துவேஷத்தையாவது ஜாதி யபிமானத்தையாவது எப்படிப் பார்க்கமுடியும்? வேருக்குக் கெடுதிவந்தால் முதல்முதல் வாடும் கொழுந்துபோல், "தாழ்ந்தவர்" பொருட்டு "ஐயோ!" என்று வாடிப் பணிபுரிந்த காரணத்தால், ராமானுஜரை மனித வர்க்கத்தின் கொழுந்தாக மதிக்கிறார்கள், வைஷ்ணவ அறிஞர்கள்.

ஸ்ரீவைஷ்ணவ ஸமதர்மம்

எல்லாரும் பிழைக்கவேண்டுமென்று வேதம் தமிழ் செய்த ஆழ்வார்கள், பல வகுப்புகளையும் சேர்ந்தவர்களல்லவா? வைஷ்ணவம் ஆதியில் தமிழ் நாட்டிலே பொதுஜனங்களின் இயக்கமாகவே வளர்ந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

ஆழ்வார்களில், வேளாளர் வகுப்பினரான நம்மாழ்வாரை,

"தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்"

[சதுர்மறை = நாலுவேதம்.]

ஆக்கி, ஸ்ரீவைஷ்ணவ உலகத்தின் பரமாசாரிய பீடத்தையும் அவருக்கே அளித்திருக்கிறார்கள் ஆசாரியர்கள்.

வைஷ்ணவத்தில் பெண்களையும் தாழ்த்தவில்லையென்பதற்கு ஆழ்வார் - கோஷ்டியில் இடம் பெற்றிருக்கும் ஆண்டாளே சாட்சி. மேலும் இந்த வைஷ்ணவம், ஸ்ரீ அல்லது லட்சுமியோடு விஷ்ணுவை வழிபடும் ஸ்ரீவைஷ்ணவமல்லவா? இந்த மதத்தை உருவாக்கிய ஆழ்வார் - பாசுரங்கள், ஆண் - பெண் வித்தியாசம் பாராமல், ஜாதிவித்தியாசம் பாராமல் புண்பட்ட நெஞ்சுக்குச் சாந்தியளித்து, ஆத்ம தாபத்தையும் போக்குகின்றன. இந்தப் பாடல்களே ஆழ்வார்கள் செய்த நிலைத்த கைங்கரியம்.

"உம்மைப்போல் இருப்பான்!"

கடைசியாக "உம்மைப் போலிருப்பான்!" என்று சொன்னாரல்லவா திருப்பதி ஆசிரியர் ஸ்ரீரங்கத்து வைஷ்ணவரை நோக்கி. ஆம், அவரிடம் வைஷ்ணவ லட்சணம் நிரம்பியிருந்தது. அதைக்கூட அறிந்துகொள்ளாமல் அவ்வளவு பெரும் பணிவோடு வாழ்ந்தார் அந்தப் பக்தர். ஆழ்வார்களும் பெரும் பணிவுக்கு இலக்கியமல்லவா? உண்மையில், பெரும் பணிவையே விளை நிலமாகக் கொண்டுமற்ற வைஷ்ணவ லட்சணங்களெல்லாம்வளர்கின்றன என்பது திவ்யப் பிரபந்த ஸாரமான உண்மை.

சுருங்கச் சொன்னால் வைஷ்ணவ லட்சணங்களையெல்லாம் ஆழ்வார்களுடைய வாழ்க்கையில் காணலாம். அவர்களுடைய உண்மையான வாழ்க்கையைப் பிரபந்தங்களிலே காணலாம்.

பிரபந்தங்களை ஓதி ஓதி, வாழ்விலும் பாராயணம் செய்து செய்து, "உம்மைப்போலிருப்பான் ஸ்ரீவைஷ்ணவன்!" என்று பிறர் சொல்லும்படி, "கொக்கைப்போல"வும், 'கோழிபோல'வும் 'உப்பைப்போல'வும் கைங்கரிய நெறியிலே சென்றுகொண்டிருப்பது நாம் ஒவ்வொருவரும் அனுஷ்டிக்கவேண்டிய ஸ்ரீவைஷ்ணவதர்மமாகும்.

நினைவிருக்கட்டும்

நாளது ஜனவரி முதல் மோகினியின் ஒவ்வொரு இதழிலும்

(1) 48 பக்கங்கள்.
(2) பல புதிய அம்சங்கள்.
(3) சுமார் 10 படங்கள்.
(4) விலை தம்பிடிக்கு ஒரு பக்கம். (அணா 4.)

காவிந்தியின் பின் நினைவுகள்

அஞ்சன வண்ணன், கண்ணன்—நடன்
    ஆடி ஆடிக் களித்தானே!

நஞ்சு நிறைந்தாயிர முடி—அஞ்ச,
நம்பன் கமல மலரினடி—வஞ்ச
நெஞ்சினை விட்டகலாதபடி—வந்து, (அஞ்சன)

காடு நெடுக ஊதுகுழலில்—மண்டி
ஓடும் இசையமுதில் மயங்கி—ஆயர்
கூடி மடுப்புனலில் மடிய,—பாய்ந்து
ஓடும் யமுனைத் திருநதியில்—முன்பு, (அஞ்சன)

சின்னக் குழந்தை என நினைத்து,—எழுந்து
சீறிச் சினந்தவனைப் பிணித்துக்—கொண்ட
என்னை ஒரு கணத்தில் இழுத்துச்—செருக்
கேறிடுமென் படத்தில் நடித்து—நின்ற (அஞ்சன)

"வஞ்சக் கடுவுடையாய்! என்றும்,—அன்பில்
வாழ அருள்புரிவேன்; உன்னுள்—நின்ற
நஞ்சைப் பிழிந்தெடுத்துன்னை—முற்றும்
நல்லவனாக்கிடுவேன்" என்று,—வந்த (அஞ்சன)

ஆசை அற நடிக்கும் பாதம்—உள்ளம்
ஆய்ந்தறியப் பதிக்கும் பாதம்—நல்ல
நேசக் கவிதை தேடும் பாதம்—அன்பர்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாதம்—கொண்டு (அஞ்சன)

தன் இச்சைப் படி நடத்தும் பாதம்—ஓடித்
தஞ்சம் புகக் கிடைத்த பாதம்—அன்பர்
முன்னின்றாடு மலர்ப் பாதம்—இன்பம்
முற்ற அருள் சுரக்கும் பாதம்—காட்டி (அஞ்சன)

பி. ஆர். ராஜசூடாமணி

தாயி பாயி

"ஸதி என்ற சொல்லுக்கு யாரை உவமை சொல்லலாம்?" என்று ஒரு கேள்வி எழுந்தது. "பார்வதி தேவிதான் ஸதி என்ற சொல்லுக்கு உரியவள்" என்றார் ஒருவர். "ஆனால், ஸ்ரீதேவி, வாக்தேவி இவர்கள் அந்தச் சொல்லுக்கு உரியவர்களல்ல என்கிறீர்களா!" என்று கோபத்தோடு கேட்டார் மற்றவர். சண்டை வலுத்தது. பலர் கூடினார்கள். "ஏன் அப்படிச் சொல்லவேணும்?" என்று காரணம் சொல்லும்படிக் கேட்டார்கள்.

முந்தியவர் மிகவும் அமைதியாக "ஸ்ரீதேவி, சாக்ஷாத் எம்பெருமான் நாராயணனை அடைந்தவள். அழகன், வைகுண்டத்திலே நித்ய சூரிகள் புடைசூழ வீற்றிருக்கின்றான்; இல்லாவிடில், அரவணையில் அறிதுயில், பிறந்தாலோ, ராஜகுமாரன்... இப்படிப்பட்ட குற்றங் குறைகளற்றவனும் அழகனுமான ஒரு கணவனிடம் பக்தியுள்ளவளாக இருப்பதில் ஆச்சர்யமென்ன? ஆனால் பவானி தேவியோ, சுடுகாட்டிலே வாழும் பிச்சையாண்டி, நெற்றிக்கண்ணன், கையிலே ஓடு. அலங்காரத்தையும் அழகையும் பற்றியோ கேட்கவேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஒரு கணவனை - குற்றங் குறைகளோடு கூடியவனை - அன்பு செய்பவள்தான் ஸதி" என்றார்.

இந்த உவமைக்கு ஒரு உவமையாய்த் தோன்றியவள் தாயீ பாயீ. பம்பாய் மாகாணத்திலே கார்வாட் என்ற ஒரு சிற்றரசு. அதன் தலைவன் பரசுராம் பந்த் என்னும் மகாராஷ்ட்ர வீரன். அவனது மூன்றாவது மனைவிதான் தாயீ. மேற்குலத்திலே பிறந்த இரண்டு மனைவிகள் இருந்தும் அவன், சேனை வீரன்மகள் அழகி என்பதன்பொருட்டே அவளையும் மணந்தான். கடலின் அடியிலே பிறந்த முத்து கடவுளின் மணி முடியை அலங்கரிப்பதுபோல தாழ்ந்த குலத்திலே பிறந்த இந்தப் பெண்கொடி தன் வீரத்தினாலும் ரூபசௌந்தர்யத்தினாலும் ஒரு சிற்றரசன் மனைவியானாள். அவள் கற்றகல்வி சோபிக்கத்தகுந்த ஒரு இடத்தை அடைந்தது.

அது பேஷ்வா பாஜீராவின் காலம். பேஷ்வாக்களின் ஆட்சி சரித்திரப் பிரசித்திபெற்றது. "நூல் எனிலோ கோல்சாயும்" என்று சொன்ன ஔவையின் வாக்கைப் பொய்யாக்கியவர்கள் பேஷ்வாக்கள். பரசுராம் பந்த் அரசியலைக் கவனிப்பதில்லை என்றும், குடிகள் கஷ்டப்படுகிறார்களென்றும் அவனுக்குத் தெரியும். சமயம் பார்த்து அவனை நசுக்கிவிடக் காத்திருந்தான் பேஷ்வா. ஆனால் வெளியே காண்பித்துக் கொள்வானா? அடிக்கடி கார்வாட் ஸ்தானத்திற்கு வந்து அவனுக்குப் புத்திமதி சொல்லிப்போவான்.

பரசுராம் பந்த் எப்படி இருந்தானென்பதும், குடிகள் எப்படிக் கேட்பாரற்றுத் தவித்தார்களென்பதும் சரித்திரப் பிரசித்தம். நாட்டிலே பஞ்சமும் நோயும், துஷ்டர்களின் அட்டூழியமும்...அரசனே துன்மார்க்கனானால்?

விவாகமான சில நாட்களுக்கெல்லாம், அவனை எடைபோட்டுப் பார்த்து விட்டாள் அவள். பிறகு படிப்படியாய் சமயம் நேரும்பொழுதெல்லாம் குடிகளிடம் பக்ஷமாய் நடக்கவேணு மென்பதைப்பற்றி போதிப்பாள். அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் விவரித்து அவன் மனம் இரங்கி நன்மை செய்யும்படித் தூண்டுவாள். அவள் பேச்சைக் கேட்கும்பொழுதெல்லாம், உண்மையிலேயே குடிகளின் அன்புக்கு உரியவனாய் வாழவேணுமென்று தோன்றும். அப்படியே செய்வதாகவும் வாக்களிப்பான். ஆனால் அந்தப்புரத்தின் எல்லையைத் தாண்டிய உடனேயே அந்த விஷயத்தை அங்கேயே உதறிவிட்டு மறுபடி தன் நாடகத்தைத் தொடங்கிவிடுவான். வயதுமுதிர்ந்த அவன் தாயும், அழகுள்ள இந்த மருமகள் மூலம் தன் மகன் திருந்திவிடுவானென்று நம்பினாள்.

தாயீ ஒரே விசனத்தில் ஆழ்ந்துவிடுவாள். அரசன் என்ற பெயரால் நடைபெறும் அநீதிகளையும் கொடுமைகளையும் சிறந்த வீரனான அவள் தகப்பன்

எடுத்துச் சொல்லுவான். ஒவ்வொருமுறை சொல்லும்பொழுதும், "அம்மா! தாயீ! நீ இளமையிலே பயின்ற வில், வாள், சிலம்பம் இவைகளை மறந்து விடாதே! அவைகள்தான் ஆபத்திற்கு உதவும்" என்று சொல்வான். அந்த நாளிலே மகாராஷ்ட்ரப் பெண்கள் வாளேந்தி போர் புரிவதிலே பெயர் பெற்றிருந்தார்கள். அவள் அடிக்கடி தன் தோழிகளுடன், வாட்போரும், மற்போரும் செய்வாள். அழகிய அவளது பொன்மேனி இந்த வீர விளையாட்டுக்களால் இன்னும் அழகுபெறும்.

அன்று நாகபஞ்சமி. பூஜாகாலத்தில் அருகில் இருக்கவேணுமென்று அழைத்திருந்தாள் இராஜமாதா. பூஜை முடிந்ததும், மாமியும் மருகியும் நெடு நேரம் பேசினர்கள். விஷயம் வேறொன்றுமல்ல, "இந்த நிலையிலேயே இருந்தால் ராஜ்யம் வெகு சீக்கிரம் அழிந்துவிடும், ஜனங்கள் கலகத்திற்கு ஆரம்பித்து விடுவார்கள். பிறகு நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. என்ன முயற்சித்தும் அவர் திருந்துவதாயில்லை. அரசுரிமையை நீங்களே ஏற்று நடத்துங்கள் என்று மாமியை வேண்டினள் மருகி. அவர்கள் ஒரு முடிவுக்குவர நெடுநேரமாயிற்று.

பேஷ்வா பாஜீராவின் அறை, அவன் மட்டும் தனியே உட்கார்ந்திருந்தான். ஒரே நிசப்தம்; அவன் சிந்தனைகள் நெடுந்தூரம் சென்றுகொண்டிருந்தன. கடந்த சிலமாதங்களாக நடைபெற்ற சம்பவங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றிக்கொண்டிருந்தன. "ஆம்! என் உதவியினல்தான் அரசுரிமையை ஏற்றுக்கொண்டாள் இராஜமாதா; இருந்தாலும் இந்த மடையன் தன் தாயை திருப்தி செய்வித்து அரசை ஏற்றுக்கொள்ள வகைதெரியாத மூடன் என்னை எதிர்க்கிருனும். என் சேனை சமுத்திரமென்ன? விரல்விட்டு எண்ணக்கூடிய இவன் படைகள் எவ்வளவு? விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா?

மராட்டியனை மராட்டியனே எதிர்ப்பதா? நேற்றுவரை "கார்வாட்" சமஸ்தானம் இருந்த சிறப்பென்ன? இன்று இவன் கோடாலிக்காம்பு தலையெடுத்த பிறகு இருக்கின்ற நிலை என்ன! தெய்வமே என்று, பாவம்! பூஜை புனஸ்காரம், ஜபதபங்கள் செய்யவேண்டிய வயதில் இந்த இராஜ்ய பாரத்தினல் இராஜ மாதாவுக்குத்தான் சுகமா? சரி, இருக்கட்டும். இன்று இவன் நம்மையே எதிர்க்கத் துணிந்துவிட்டான். பாஜீராவ் யார் என்பதை இவனுக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே எழுந்து உலாவலானன். இதற்குள் தூதுவன் ஒரு செய்தி கொண்டுவர அவசரமாய் எழுந்து வெளியே சென்ருன்.

இராஜ மாதாவின் பூஜாக்ருகம். மாமியும் மருகியும் உட்கார்ந்து மிகவும் தணிந்த குரலில் பேசிக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் முகத்தில் ஏன் இவ்வளவு வாட்டம். அவள் எழுந்து கரங்குவித்தவளாய் பவானிதேவியை நோக்கி, வேண்டி நின்ருள். கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. இராஜமாதாவும் எழுந்தாள். மருமகளை நெருங்கி அவள் தலையிலே கையை வைத்து "அம்மா! வருந்தாதே! நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்று ஆகிவிட்டது. இவன் பேஷ்வாவை எதிர்க்கப் புறப்படுவானென்று நான் நினைக்கவேயில்லை. ஆழமறியாமற் காலை விட்டுவிட்டான். இனி என்ன செய்வது? மஸூர்கட் கோட்டை சிறை மிகவும் பயங்கரம். காற்று வெளிச்சம் ஒன்றுமே புகாத குகை. கைதியாகி, அதுவும் மஸூர்கட்டிலே சிறையிருக்கிருன் என்ருல் அதைவிட அவமானம் வேறென்ன? எப்படியாவது இந்தக் களங்கத்தைப் போக்கடித்துக்கொள்ளவேணும், வருந்தாதே! பவானிதேவி ஏதாவது ஒரு வழிவிடாமற்போய்விடுவாளா?" என்ருள். சோக மிகுதியால் அவள் குரல் கம்மியது. திடீரென்று ஒரு பிரகாசம், தேவியின் அருகிலிருந்த தீபம் சுடர்விட்டுப் பொறிகளைச் சிந்திற்று. தாயீபாயின் முகம் மலர்ந்தது. மிகவும் ஆத்திரத்துடன் கூடிய குரலில், "அம்மா! நீங்கள் ஆசீர்வதியுங்கள், நான் மறுபடி ஒரு சேனையைத் திரட்டி பேஷ்வாவையே எதிர்க்கிறேன். மகாராஷ்டிரப் பெண்களுக்கும் வாள்பிடிக்கத் தெரியும் என்பதைக் காண்பிக்கி

றேன்'' என்றாள். நீர் நிறைந்த கண்களுடன், உள்ளம் நெகிழ, மருமகளை ஆசி கூறித் தழுவிக்கொண்டாள் மாமி.

"மஸூர்கட்'' கோட்டை பாபு கோகலே என்பவன் வசமிருந்தது. அவனுடைய பலத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு திடீரென்று ஒருநாள் அவனை எதிர்த்தாள் தாயி. அவன் சிறந்த வீரன்தான். இருந்தாலும் ஒரு சின்னஞ் சிறு பெண், இவ்வளவு தைரியமாகத் தன்னை எதிர்ப்பாளென்று அவன் நினைக்கவில்லை. பிறகும், ஏதோ விளையாட்டுத்தனமாகப் போர் முனைக்கு வந்துவிட்டாள்; இவளாவது வாளேந்தி சண்டைசெய்வதாவது. ஒரு நொடியில் கைதியாக்கி விடலாம்'' என்று நினைத்தான் அவன். ஆனால் சேனைகளை அவள் அணிவகுத்து நடத்துவதையும் கட்டளையிடுவதையும் பார்த்து திகைத்தேபோனான். பலனும் அப்படியேதான் ஆயிற்று. பாபுகோகலே, வெகு சீக்கிரத்திலேயெ தோல்வியை ஒப்புக்கொண்டு கைதியை விடுதலைசெய்தான். கணவனை சிறைமீட்ட தாயி மறுபடி கார்வாட் சமஸ்தானத்திலேயே இருக்க விரும்பவில்லை. இருந்தால் கணவன் பழயபடி ஆகவும்கூடும். தாய்க்கும் மகனுக்கும் சச்சரவுகள் நேரக்கூடும் ஆகவே, தன் வீரர்களின் உதவியினால் பஸோடா துர்க்கத்தை எதிர்த்து, வெற்றி பெற்று அதில் இருவரும் வசித்துவரலானார்கள்.

பாபுராவ் கோகலே, தோல்வியைக் கேட்கக் கோபித்துச் சீறி எழுந்தான் பேஷ்வா. எரிகிற தீயை ஏறத்தள்ளியதுபோலாயிற்று. தான் அடைந்த அவமானம், ஒரு பெண்பிள்ளைக்குத் தோற்றுவிட்டோமே என்ற ஏக்கம், பேஷ்வாவின் கோபம், இவையிரண்டும் சேர, எப்படியாவது அவளைக் கைதியாக்கி பஸோடா துர்க்கத்தைக் கைப்பற்றுவது என்ற தீர்மானத்துடன் எழுந்தான் அவன். கோகலேயின் நெஞ்சு கொதித்தது. தகுந்த முன்ஏற்பாட்டுடன் வந்தும் மறுபடி தோற்றுஓட நேர்ந்துவிட்டதே. இனி எத்தனை வருஷங்களானாலும் வெற்றி அல்லது சாவு நேரும் வரை சண்டைசெய்வது என்று சபதம் செய்துகொண்டு மூன்றும் முறை போருக்கு எழுந்தான். போர் இடைவிடாமல் எட்டுமாதகாலம் நடந்தது. வாள் முனையில் அவளை வெல்லமுடியாதென்று கண்ட இவன் ஒற்றர்கள்மூலம் தான்யக் கிடங்கிலே தீவைத்துவிட்டான்.

வீர சௌந்தர்யம் முகத்தில் சொட்ட சாக்ஷாத் பவானிதேவியேபோல் உட்கார்ந்திருந்தாள் அவள். இந்தப் போர் இன்னும் எவ்வளவு நாள் நீடிக்குமோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். இந்த சமயத்தில்தான் தானியக் கிடங்கிலே தீ என்ற செய்தி அவள் செவிகளுள் வீழ்ந்தது. சேனவீரர்களை ஒன்று சேர்த்து, "ஆகாரம் போய்விட்டது, இனி பட்டினியாகவே யுத்தம் செய்து களத்திலேயே மடிந்துபோவோம்'' என்றாள். 'வெற்றி நமக்கு உண்டு' என்றவரையில் பலரும் முன்வந்தார்கள். இப்பொழுதோ ஒருவரும் வாயே திறக்கவில்லை. ஒரே மௌனம். அவள் சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். "ஏன்? சரணகதி செய்ய விரும்புகிறீர்களா? உயிரை விடவேணுமேயன்றி, பணியக் கூடாது. இருமுறை தோற்ற அவன் சூழ்ச்சிக்கு நாம் பணிவதா? உயிரை விடவேணுமேயன்றி, பணிவதா? நான் புறப்பட்டுவிட்டேன். யார் வருகிறீர்கள் என்னோடு!'' என்று அறைகூவினாள். முதலில் இருவர் எழுந்தனர்; பின், இன்னும் அறுவர், இப்படி படிப்படியாக, ஒரு ஜாமத்திற்குள் எல்லோரும் எழுந்துவிட்டார்கள். ஆனந்த மிகுதியினால் அவள் முகம் சுடர்விட்டு ஒளித்தது.

பேஷ்வா பாஜீராவ் ஆனந்தமாய் திண்டிலே சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தான் பாபுராவ் கோகலே, வெற்றியின் பெருமிதம் அவன் முகத்திலே தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தாயி தலைகுனிந்த வண்ணம் எதிரே நின்றுகொண்டிருந்தாள். வளையல்கள் அணிந்த மலர்க்கரத்தில் விலங்கு. தங்கப்பதுமைபோல் எதிரே நிற்கும் அந்தக் கட்டழகியை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான் பேஷ்வா. மனத்துள் "அடாடா! எத்தகைய வீரப் பெண்! என்ன தைரியம்! என்ன சாமர்த்தியம்! இவளைப் போன்ற வீரப்பெண்களைப் பெற்ற பாரதத்தாய் வாழட்டும்' என்று நினைத்தான்.

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமதி. 'மைதிலீ சுதா'

ஸ்த்ரீ எழுத்தாளர்கள்

11

ஸ்ரீமதி 'வாணி'

ஸ்ரீமதி 'வாணி' அவர்களின் உண்மைப் பெயர் ஸ்ரீமதி சுப்பம்மாள் என்பது, "வாணி" என்பது இலக்கிய உலகில் மாத்திரம் நிலவிவரும் புனைப் பெயர். இவ்வம்மை ஜாதியில் கர்நாடக பிராஹ்மணர். இவருடைய யஜமானர் ஸ்ரீமான் நஞ்சுண்டைய்யா அவர்கள் மைசூரில் அட்வோகேட்டாக இருக்கிறார்.

கன்னடதேசத்து ஸ்திரீ எழுத்தாளர்களில் ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ ஆர். ஸ்ரீனிவாசன், ஸ்ரீமதி "வாணி" இவ்விருவரும் முன்னணியில் நிற்கிறார்கள். ஸ்ரீமதி "வாணி"யின் பாணியும், எழுத்து நடையும் மைசூரில் மிகப் புகழ்கொண்டது, இவ்வம்மையின் உண்மைப் பெயரையும், வரலாரையும் பலர் அறியார். குப்ததாயினியாக இருப்பதில்தான் இவருக்கு வெகு பிரியம்போலும். உதாரணத்திற்கு நான் மோகினியில் இவர் ஜீவிய சரிதத்துடன் அச்சிட இவருடைய புகைப்பட மொன்றையும், வாழ்க்கைக் குறிப்புகள் சிலதையும் பல தடவை தரும்படிக் கேட்டும் கொடுக்க மறுத்து விட்டார். ஆதலால் எனக்குத் தெரிந்த சொற்ப விஷயத்தைக்கொண்டு இக் கட்டுரையை வரையலானேன்.

"கன்னட நுடி," "பிரபுத்த கர்நாடகா" "பிரஜா மாதா தீபாவளி மலர்," "ஜய கர்நாடகா" "வாணி" முதலிய கன்னட பத்திரிகைகளில் இவருடைய கதைகள் அவ்வப்பொழுது வெளிவருகின்றன. கன்னட தேசத்தில் இவருடைய பேரும் புகழும் சிறப்புற நிலவி வருவதுபோலவே இவரது இலக்கியத் திறமை என்னும் பூஞ்செடியில் மலர்ந்த சுகந்த புஷ்பங்களின் அழகும், மணமும் பலவேறு பாஷைகள் என்ற மாளிகைகளில் மொழி பெயர்ப்பென்னும் கிண்ணங்களில் வைக்கப்பட்டு பரவட்டுமென்று அம்பிகையை துதிக்கிறேன்.

இந்த இதழில் இவருடைய கதையொன்று மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகி இருக்கிறது. இதை வாசித்துப் பார்த்தால் இவருடைய எழுத்து வன்மை எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறதென்பதை அறியலாம்.

அடுத்த இதழிலிருந்து

கன்னடதேச எழுத்தாளர்களுள் பிரசித்தி பெற்றவரும், மோகினி அன்பர்களின் அபிமானத்திற்குப் பாத்திரமானவருமான ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்கள் மோகினியில் மாதந்தோறும் சிறு கதை அல்லது கட்டுரை அல்லது மொழி பெயர்ப்பு எழுதுவார். நேயர்களுக்குப் பெரும் விருந்தாயிருக்குமென்று நம்புகிறோம். அடுத்த இதழில் அவர் எழுதிய "தண்டனை" வெளியாகும்.

மூன்று கடிதங்கள்

(கன்னடக் கதை)

(மூல எழுத்தாளர்:-ஸ்ரீமதி "வாணி" மைசூர்.)

(மொழிபெயர்ப்பாளர்:-"மைதிலீ சுதா.")

I

நத்தீ கிராமம்
12—11—1924.

குழந்தாய்,

என் செல்வ குமாரி! உன்னை என்னவென்று பெயரிட்டழைக்கட்டும்? குழந்தை என்னும் அதிகாரத்தை நான் துறந்திருக்கிறேன். என் சொந்த சுகத்திற்காகவெண்ணி உன்னை துயரத்திலாழ்த்தி, திரும்பவும் உன்னை அவ்விதம் அழைப்பதற்கு என் நா எழவில்லையே. தற்பொழுது குழந்தைகளுடன்கூட இலை முன்னால் உட்கார்ந்து வயிறு நிரம்ப சாப்பிடும்பொழுது, அதன் விலை எவ்வளவு பெறும் என்பதை நினைந்து நினைந்து கண்ணீர் வடிக்கிறேன். ஆனால் அன்றைக்கு நீ கால்மீது விழுந்து வேண்டியபொழுது அதை அறியக்கூடாத வகை யிருந்தேன். ஏன் என்று கேட்பாயா! அப்பொழுது எனக்கு புலப்பட்டது ஏழ்மையின் பயங்கர சொரூபமொன்றுதான்! பசிப்பிணியின் கோர தாண்டவத்தின் எதிரில் உன் அழுகை புலப்படாமல் போய்விட்டது.

பத்மா! என்னை மன்னிப்பாயா? உனக்கு அதெவ்வளவு அசமாதான மேற்பட்டிருக்கிறதென்பதை நான் அறிவேன், அன்றைக்கு உன்னை பார்ப்பதற்காக வந்தபொழுது, நீ உள்புறம் இருந்துகொண்டே "இல்லை" என்று சொல்லி அனுப்பினது எனக்கு தெரியாமலில்லை. அதற்காக எனக்கு கிஞ்சிற்றும் கோபமில்லை. இப்பொழுது என் கண் நன்றாகத் திறந்திருக்கிறது. அதன் வெளிச்சத்தில் "என் தவறுக்குத் தகுந்த பிராயச்சித்தம்" என்று சமாதான மடைந்தேன்.

ஆனால் பத்மா, நான் செய்தது அப்பேர்ப்பட்ட அபாண்டமான அபராதமா? நிராசை என்ற பனி (மப்பு) கரைந்தபிறகு ஒருதடவை நிதானமாக யோசித்துப் பார்! என் ஈனநிலைமையில் இதைவிட உசத்தியான, உத்தமமான இடத்தில் உன்னை கலியாணம் செய்துகொடுப்பதற்கு சாத்தியப்பட்டிருக்குமா? என் ஏழ்மைத்தன்மையின் முன்பு உன் அழகு, கல்வி எதுவும் கணக்கிற்குவராது. இது நம் சமூகத்தின் தற்போதிய நிலை!

மாப்பிள்ளைக்கு சற்று வயது முதிர்ந்திருப்பதைத் தவிர, உனக்கு அங்கே எவ்வித குறைவுண்டு? வாலிபனுடன்கூட ஏழ்மைத்தனத்தில் வாழ்வதைவிட இது மேன்மையுடையதல்லவா?

உனக்கு அப்படி தோன்றலாம். புண்ணிய வசத்தால் உனக்கு ஏழ்மை நிலையின் அறிவேற்படுவதற்கு முன்பே, உன் சித்தி உன்னை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள். அப்பொழுது நீ இரண்டு வயது குழந்தை. சுக போகத்தில் வளர்ந்த நீ கற்பனைக் கோட்டைகளை கட்டியிருக்கலாம். நமக்கு அதற்கேது அவகாசம்? பத்மா! கடவுள் உன்னை அவ்வித அனுபவத்திலிருந்தும் கரையேற்றினான். எங்கள் துரதிருஷ்டம். அவள் இவ்வளவு சீக்கிரத்தில் நம்மை விட்டுப் பிரிய நேரிடவேண்டுமா? அவள் (சித்தி) இருந்திருந்தால் அப்பொழுதே வேறுவிதமாக இருந்திருக்கும்.

நான்செய்த காரியத்தைப் புகழ்வதற்காகவே இப்படிச் சொல்கிறேன் என்று எண்ணாதே. உன் முன்பு இருந்த விஷயத்தை மறைக்காமல் சொல்லி இருக்கிறேன், மன்னிப்பதும், விடுவதும் உன் விருப்பம். ஆனால் இவ்வளவு மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நானும், உன் தங்கை, தம்பிமார்களும் உயிருள்ளளவும் உனக்கு நன்றியுடையவர்கள்! அவர்களுடைய எதிர்கால சுகமணைவதற்கும் உன்னுடைய தியாகம்தான் அஸ்திவாரக் கல்லாகவிருக்கிறது

இவ்வளவு பேர்களின் சுகத்திற்குக் காரணமான உன்னை கடவுள் வருங்காலத்திலாவது சுகமாக வைக்கட்டும். இதான் என்னுடைய வேண்டுகோள் !

இப்படிக்கு உன்
தகப்பனர்

II

அன்புள்ள பத்மா,

மழைகாலத்து பகலவனைப்போல் உன் கடிதமேன் இவ்வளவு அரியதாகி விட்டது? மைசூரைவிட்டுச் சென்றவுடன் சினேகிதிகளையும் நினைவிலிருந்து அகற்றிவிட்டாயா ! புதியதொரு செய்தி உனக்கு கலியாணமாயிற்றென்று கேள்விப்பட்டேன். கேட்டாலும் நம்பமுடியவில்லை. ஆறுமாதங்களிலிருந்தும், படுக்கை பெட்டியை 'பேக்' செய்துகொண்டு தயாராக விருந்த எனக்கு தெரிவிக்காமலா கலியாணம் ! இது உண்மையா ? ஆனால் என் மனமார்ந்த வந்தனங்களை பெற்றுக்கொள்.

நீ கிருகலக்ஷ்மியாக, சுகமாகவிருக்கிறாயா பத்மா ? நீ எப்பொழுதும் என்னிடத்தில் உன் ரகசியத்தை மறைத்துவைத்தது கிடையாது. ஆதலால் அந்த வார்த்தையை கேட்க துணிந்துள்ளேன். உன் கலியாணமென்றால் பற்பல விஷயங்கள் நினைவிற்கு வருகின்றன. அவைகளனைவதையும் இந்த சின்னஞ்சிறு கடிதத்தில் எவ்வாறு நிறைக்கட்டும்? முக்கியமானதைமாத்திரம் கேட்கிறேன். வரன் யார் ? அவன்தான்...அல்லவா ? இருக்கவேண்டும்; ஆனால் விதி அந்தமாதிரி உங்களிருவரையும் சந்திக்கும்படிச் செய்திராது. அப்பப்பா...! அந்த பூர்ண பிரவாகத்துடன் கூடிய ஆறு...! இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் உடல் சிலிர்க்கிறது. அதெப்பேர்ப்பட்ட வெள்ளம்! படகோட்டிகள்கூட திகில்பட்டபொழுது தன் உயிரையும் பாராட்டாமல், நண்பர்களின் பேச்சையும் லக்ஷியம் செய்யாமல் பரிபூர்ண வெள்ளத்தில் குதித்து உன்னைக் காப்பாற்றினனே ! எல்லை மீறி—பாலத்தின்மீதும் கடந்து பிரவகித்துக்கொண்டிருந்த காவேரியின் அழகைக் காண்பதற்காக, நாம் சென்ற தினமே அவனும் நண்பர்களுடன் கூட அவ்விடத்திற்கு வந்ததும், நீ கால் வழுக்கி காவேரியில் விழுந்ததும், அவன் உன்னை ரக்ஷித்ததும் தெய்வசங்கல்பம்தான் என்று எனக்கு அப்பொழுது தோன்றிக்கொண்டிருந்தது. அந்த விநாடி எங்கள் நிலைமை எப்படியிருந்ததென்பதை அறிவாயா? "ஜலத்தில் முழுகினவனைவிட கரையில் அமர்ந்து அவனது வரவை நிரீக்ஷிப்பவனின் கஷ்டம் அதிகம்" என்னும் வார்த்தையின் உண்மையான அனுபவம் எங்களுக்கேற்பட்டது ! சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களின் கையிலெடுத்த சாதம் கையிலேயேதான். வாயில் போட்ட சாதம் வாயிலேதான் ! அனைவரும் ஒருமிக்க கூச்சலிட்டனர். பைத்தியக்காரப் பெண் எத்தகைய காரியம் செய்தாய் ? கையலம்பிக்கொள்வதற்குச் சென்று கால் வழுக்கி கைகொடுக்கவிருந்தாயே ! உன் சித்தியின் புலம்பலைக் கேட்க வேண்டுமா ! "கண்டவாள் குழந்தையை கொணர்ந்து வளர்த்து, அபவாதத்தைச் சுமந்தேனே" என்று புலம்பினாள். அந்த மகராஜன் ஆபத் பந்துவாக வந்ததினால் எல்லாம் சரியாய் போய்விட்டது. இல்லாவிடில்..."ட்ரிப்பின்" கதி என்னவாகி இருக்கும்?

அவனுக்கு உங்களகத்தில் 'நல்வரவு' கிடைத்தது ஒன்றும் அதிகமில்லை. விசேஷமென்னவெனில் அதே சாக்கில் நீங்களிருவரும் அன்பர்களானதுதான் அப்பொழுது நீ அவனுக்காக எப்படி ஆர்வம் கொண்டிருந்தாய் ! நினைவிருக்கிறதா? அவன் நான்குநாள் வீட்டின் பக்கம் வராமல் போனால் தத்தளிப்பாயே!... இப்பொழுது இந்த கதையெல்லாம் எதற்கென்று கேட்கிறாயா ? அந்த காலத்திலெல்லாம் உன்னுடன்கூட உனக்கு உதவியாளாக விருந்தேன். ஆசை கைகூடி சுகநாள் கிட்டியபொழுது என்னை ஏன் மறந்தாய் ?

இவ்வளவு எழுதிவிட்டேனென்று கோபியாதே. இப்பொழுதுதான் என்ன மிஞ்சிவிட்டது ? நீ அழைக்காவிட்டாலும்கூட நாகைவே வந்து உன் ஆனந்த

கரமான குடித்தனத்தைக் கண்டு சந்தோஷப்படுவேன். இந்த கடிதத்தை உன் அன்பனுக்கும் காண்பி. துலேவில் இருந்துகொண்டு என்னைக் கண்டு நீங்களிருவரும் சிரித்துக் குலாவும் (சித்திரத்தை) காட்சியை நான் இங்கிருந்தே கற்பித்துக் கொள்கிறேன்!

இவ்விடத்திய விஷயத்தைப்பற்றி என்ன எழுதட்டும்? சினேகிதிகளின் கூட்டத்திலெல்லாம் உன்னைப்பற்றிய பேச்சுதான். அனைவரும் உன்னை திட்டியவண்ணம் இருக்கின்றனர்—காதலனை அடைந்து, அனைவரையும் மறந்துவிட்டாளே, என்று. நீ இவ்விடம் வரும்பொழுது நேசிகளின் சினத்தை ருசி பார்ப்பதற்குத் தயாராக வா,

இப்படிக்கு உன் அன்பிற்குகந்த
சீதா

III

"என் சீதா,

உனக்கென்ன வரையட்டும்? எழுதப்படாதென்று ஒரு மாதமாக உன் கடிதத்தை மூடி உள்ளே வைத்திருந்தேன். எழுதாமல் இருக்கவும் முடிவதில்லை. வெகு நாட்களாக மனதுடன் போராடி அலுத்து விட்டிருக்கிறேன். உன் பேரன்புடைய இதயம் உதவிக்காக வந்திருக்கும்பொழுது அதை வேண்டாமென்கிற திறமை இல்லாமலிருக்கிறது.

உன்னை மறப்பேனு சீதா! உங்களுடன்கூடக் கழித்த நாட்கள் என் வாழ்வில் மிக மிக இனிப்பானவை. அவைகளை மறந்துவிட்டால் வாழ்வில் எஞ்சுவது ஏது!

சித்தியின் மரணத்தால் எனக்கு பேரிடி விழுந்தாப்போலாகியிருந்தது. ஆனால் ஊரில் அதைவிட அதிகக் கஷ்டம் காத்திருக்கிறதென்று நான் அறியேன். அங்கே சென்று பார்த்தால் வீட்டு நிலைமை விவரிக்கக்கூடியதாக விருக்கவில்லை; அதை பார்த்துதான் அனுபவிக்கவேண்டும். ஏழ்மைத்தன்மையே வடிவமெடுத்தாப்போல்—எட்டு குழந்தைகள், உண்ண அன்னமில்லை. உடுத்த துணியில்லை; இருந்த ஒரு கூண்டும் கடன்காரர்களின் பங்கிற்குச் சென்று விட்டது; அப்பா வாரண்டிற்கு தப்பித்துக்கொண்டு தலை மறைவாகப் பதுங்கிக் கொண்டிருந்தார்! அவ்விடத்திய நிலைமையைப் பார்த்தும்கூட என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை! அவர்களின் நடுவில் பிறந்தும்கூட அவர்களின் காற்றுகூட என்மீது படாவண்ணம் என்னை துலேவில் வைத்திருந்த மர்மம் ஏனோ இதுவரையிலும் அறியேன். இங்கே அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, நான் அதன் அறிவே இல்லாமல், உண்டு சுகமாகவிருந்தேன். எத்தகைய மானக்கேடு!

கஷ்டகாலத்தில் யாருக்கு யார் சீதா! ஊரில் அத்தனை பேர் இருந்தார்கள். அவர்கள் நன்றுகவிருந்தகாலத்தில் அவர்களிடத்தில் வேண்டிய உதவிபெற்று முன்னுக்கு வந்தவர்கள்கூட அச்சமயம் அவர்களின் உதவிக்கு வரவில்லை. அந்த குழந்தைகளின் பரிதாபத்தை, கண்ருவியை கல்லாவது கரைந்திருக்கும்; ஆனல் மனிதர்கள் மனமுருகவில்லை.

ஒருநாள் மாலைப்பொழுது, எங்கள் தகப்பனரின் நண்பரொருவர் வேறொரு மனிதருடன் எங்கள் அகத்திற்கு வந்தார். அவர்கள் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளைச் செவியுற்று என் தலை கிரு கிருக்க வாரம்பித்தது. பசிக் கொடுமையையாவது சகித்துக்கொண்டிருப்பேன். ஆனல்...அந்த கலியாணத்திற்குத் தயாராகவிருக்கவில்லை.

சீதா, என் பேச்சைக் கேட்பவர் யார்? என் விருப்பத்தைக் கூட கேட்கவில்லை. நானகவே வெட்கத்தை துறந்து தகப்பனர் காலைப் பிடித்துக்கொண்டு புலம்பினேன். தகப்பனரின் மனது மாறவில்லை. பெற்றோர்கள் கைவிட்ட பிறகு புகலிடம் யாது சீதா! அன்றைக்கு இரவு அனைவரும் தூங்கியபிறகு வீட்டருகிலிருந்த கிணற்றை சமீபித்தேன். ஊர் முழுவதும் நிச்சப்தம். எனக்கு

எத்தகைய திகிலும் ஏற்படவில்லை. இதோ விழவேண்டும். அதற்குள்ளாக வீட்டினுள்புறமிருந்து குழந்தை அழுவது கேட்டது. காலையிலிருந்தும் அழுது அழுது போதுமாப் போய் தூங்கியிருந்தது. மறுபடியும் எழுந்திருந்தால் எதைக்கொடுத்து சமாதானம் செய்வதென்று, அம்மா சாயங்காலமே பிடித்து மனமுருகிக் கொண்டிருந்தது நினைவிற்கு வந்தது. குழந்தையின் அழுகை குறிவைத்து அம்புபோல் இதயத்தைத் துளைத்து, என் ஆலோசனை வேற்றுமை யடைந்தது. நான் செத்தால்தான் என்ன? என் கஷ்டம் குறைந்தது...அவர்கள் வாழ்வோ...? அதைவிட பிழைத்தும் செத்தாப்போலிருப்பது மேன்மையல்லவா? இன்னொரு யோசனை தோன்றுவதற்குள்ளாகவே அகத்திற்குத் திரும்பினேன்.

வேறென்ன சொல்லட்டும் சீதா! நீ கேட்ட செய்தி உண்மை. நான் கிருகலக்ஷ்மீதான். இங்கே சுகத்திற்கொன்றும் குறைவில்லை. இருந்தால் அது என் தோஷம்.

இன்னொருவிஷயம், அதை சொல்லக்கூடாதென்றிருந்தேன். ஆனால் அதை சொல்லிக்கொள்வதற்கு உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நான் "என் அக"த்திற்குச் சென்று சிலநாட்களாகி இருந்தது. தாயார் காலஞ் சென்றதிலிருந்து அகத்திற்கு வராமலிருந்த சிறிய யஜமானன் பரீக்ஷையை முடித்துக்கொண்டு அகத்திற்கு வருகிறானென்று வீட்டில் ஏக தடபுடல்! அவன் வரும்பொழுது இருட்டிவிட்டிருந்தது! நான் சகஜமாகக் குனிந்து பார்த்தேன். என்னத்தைப் பார்த்தேன் தெரியுமா? தலை கிருகிருத்து வரவே கண் மங்கிவிட்டது. தலையில் எதுவோ தாக்கினாப்போலாயிற்று. நினைவு வந்தபொழுது படுக்கையில் படுத்திருந்தேன்.

சீதா, கஷ்டத்திற்கும் நிராசைக்கும் ஒத்துப்போய்விட்டிருக்கிறது; ஆனால் அவ்வளவு பலத்த அடிக்குத் தயாராக விருக்கவில்லை. இன்னும் அதிலிருந்தும் சமாளித்துக் கொள்ளவில்லை. சீதா, நான் அன்றைக்கே ஏன் சாகவில்லை? இந்த கஷ்டத்திற் காளாகட்டுமென்று என்னை பிழைப்பித்தானோ! "அவனு"க்கும் அப்படிதான் தோன்றியிருக்கவேண்டும். என் புறம் அதெவ்வளவு திரஸ்காரத்துடன் பார்த்தான், தெரியுமா! அந்த பார்வையில் மன்மதனைப்போல் தகித்துவிட்டிருந்தால் நன்றாக விருந்திருக்கும்! அந்த புண்ணியம் எனக்கெங்கே?

சீதா, மனது வெறுத்துவிட்டிருக்கிறது. நாள் கழிவதே சிரமமாகவிருக்கிறது. இதனை வதையும் எவர் முன்னிலையில் சொல்லிக் கொள்வேன்? ஒரொரு தடவை இந்த பிழைப்பை முடித்துக்கொண்டு விடலாமென்று தோன்றுகிறது. தகப்பனாரின் கடனையெல்லாம் ஒழித்து, அவர்கள் எல்லோருக்கும் சுகஜீவனம் கிட்டுமளவு பணத்தைக்கொட்டி இருக்கிறார். அத்தனை ருணத்தைச் சுமந்திருப்பவள் எப்படி சாகட்டும்!

அவனுக்கும் இங்கே அலுத்துவிட்டது போலிருக்கிறது. இரண்டொரு நாளில் இங்கிலாந்திற்குச் செல்கிறான். அவன் மாதிரியைப் பார்த்தால் திரும்பி வருவானென்று தோன்றவில்லை. கேவலம் பணத்திற்காக வேண்டி நான் அவனுடைய தாயாராவதற்கு இணங்கினேன் என்ற எண்ணம் அவனுக்கேற்பட்டிருக்கிறாப்போலிருக்கிறது. உண்மை நிலைமை அவன் அறிவது எங்ஙனம்? எனக்கோ அவனை பார்ப்பதற்குக்கூட போதிய தைரியமில்லை. நீ என்றைக்காவது அவனைப் பார்க்க நேரிட்டால், எனக்காக மன்னிப்பைக் கேள்.

சீதா, நான் ச்வார்த்தி. கடிதம் நிறைய என்னைப்பற்றியே எழுதி இருக்கிறேன், உன் கருணை நிரம்பிய இதயத்தில் எல்லா அபராதங்களுக்கும் மன்னிப்பு உண்டென்பதை அறிவேன். வேறென்ன எழுதட்டும்! வாழ்க்கையின் வெள்ளத்தில் அலை எழும்பிய பக்கம் செல்லும் உலர்ந்த இலையைப்போல் என் வாழ்வு கழிந்துக்கொண்டிருக்கிறது. வாழ்வு...எத்தகைய வாழ்வு? சீதா, இதையா நாம் விரும்பி சொப்பனம் கொண்டிருந்தது?

மோகினி ஜனவரி இதழை

உங்கள் ஏஜண்டிடம் உடனே ரிஸர்வ் செய்யவும்.

விலை அணா நான்கு

தற்காலத் தமிழ் கவிதை

விமர்சனம்

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

3. பாரதி தாசன்

இவர் பாரதியின் தாசனாகவே பாடுகிறார். பாரதியாரோடு நெருங்கிப் பழகி, அவருடைய குரலின் கவிதா வெறியையும் இசையமுதையும் கிரகித்து ஓரளவு அனுபவத்திலும் கொண்டுவந்துவிட்டார். சொந்த அனுபவங்களை பாரதிதாசன் இசைச் சிறப்புடன் பாடியிருக்கும் சின்னஞ்சிறு கவிதைச் சித்திரங்கள், அழகிய ஜ்வாலையை அள்ளி வீசுகின்றன; உள்ளத்தில் மின்னிப் பறக்கும் உண்மைகளை, தமிழ் மொழியில் ஆவேசத்துடன் அமைத்திருக்கிறார். ஆனால் மத்தியில், சாதாரண சொற்களாகவே மதித்துக் கொச்சைச் சொற்களையும் வழங்கும்போது, கவிதையின் மாற்று குறைந்து விடுகிறது.

இவருடைய சில நயமான பாடல்கள், கவிதைக் கலைக்கு ஒரு புட்பாஞ்சலியாகவே பொலிகின்றன: மொழியின் சிருஷ்டி மெருகில், ஒரு புதுமையும் எழிலும் தோன்றித் தோன்றி மறைகின்றன. மொழித்திரையின் பின், உண்மை உறங்கியும் விழித்தும், ஆர்கலித்துக்கொண்டுமிருக்கிறது. இதய மகிழ்ச்சியும் சோகமும், பாவின் மணிகளில் ஒலிக்கின்றன. மொழிச் சித்திரங்கள், இதய மர்மங்களையே முராலுகின்றன. சில பகுதிகளில், மொழியின் நெளிவுகளிலும் வளைவுகளிலும் உணர்ச்சியின் ஏற்றமும் இறக்கமும் தெரிகின்றன; சில இடங்களில் கவிதை, சாதாரண வசனநிலைக்கும் வந்துவிடுகிறது; வேறு சில இடங்களில், சின்னஞ்சிறு பொடிப்பொடிச் சித்திரங்கள், சிஃகாரக் காவிய லீலைகளாக வந்து விளையாடுகின்றன; உலகம், உணர்ச்சியின் உதய அரங்கமாகவே கவி பாரதி தாசனுக்குப் புலப்படுகிறது; எல்லாம் காட்சிப் படலங்கள், உணர்ச்சியில் பிறந்து சிறந்து பறந்து வருகின்றன. கவிதை திடீரென்று மின்னும்போது, கவியின் மனஉறுதி சிதறாமலிருந்தால், உயர்ந்த அழியாத கவிதை, உலவீனமின்றி நின்று நிலைக்கும். இது எந்தக் கவிக்கும் கலாயோகிக்கும் பொருந்தும் உயர்ந்த உண்மையே.

பாரதி தாசன் பாடியிருக்கும் 'குடும்ப விளக்கு' ஒரு அபூர்வ இல்லற வாழ்க்கைச் சித்திரம். ஒரு கற்பலங்காரி, குடும்ப விளக்கு: குடும்பத்தில் ஒரு மனைவி தனது கடமையை உணர்ந்து உணர்ந்து, இடையறாது தினந்தோறும் பணியாற்றிவரும் அருமையான சித்திரம் இது; வாழ்க்கைத் துறைமுகத்தில், இல்லற தீபஸ்தம்பமாக ஒரு மனைவி ஒளி வீசுகிறாள். கடமையை மறந்தவள், காதலியுமல்ல, மனைவியுமல்ல; சூரியன் உதயமாகி, கதிர்வீசி, உலகத்தைக் காத்து

அந்தியில் மறைவதுபோல, ஒரு உண்மை மனைவியும், உணர்ந்து உணர்ந்து தனது கடமையை பகலும் இரவும் இடையறாது செய்வதில் இன்பமடைகிறாள். இந்தப் பாடல், பிரெஞ்சு இலக்கிய முறையைத் தழுவியதாகத் தோன்றுகிறது. ஆனால் பாரதி தாசன் அமைத்திருக்கும் சித்திரம், ஒரு தமிழ் குடும்ப வாழ்க்கைச் சித்திரமே: அநுபவத்தில் உதித்த சித்திரம்தான் - சிறிதும் இதில் சந்தேகமில்லை! ஒரு உத்தமமான மனைவியின் இல்லற தருமம், இந்தப் பாட்டில் ஜோதிப்படமாகவே சுழன்று சுழன்று வருகிறது. சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளும் சித்திரப்பொலிவுடன் மின்னுகின்றன. மனைவி இதய நிறைவுடன் இன்னிசையில் பாடி, தன் கணவனையும் குடும்பத்தையும் மகிழ்விக்கும் நிலையைப் பாருங்கள்:

"குளிர் விழி, இளநகைப் பூங்
குழலினாள் குந்தினாள்; தன்
தளிருடல் யாழ் உடம்பு
தழுவின; இருகு ரல்கள்,
ஒளியும் நல்வானும் ஆகி
உலவிடும் இசைத்தேர் ஏறித்
'தெளிதமிழ்' பவனி வந்தாள்;
செவிக்கெலாம் காட்சி தந்தாள்!

உள்ளத்தில் கவிதை வைத்தே
உயிரினால் எழுப்பினாள்; அவ்
வெள்ளத்தில் கலையைக் கோத்தாள்;
தெள்ளத் தெளிந்த நீர்போல்,
செழுந்தமிழ்ப் பொருள்போய் நெஞ்சப்
பள்ளத்தில், கோடைத் துன்பம்
பறந்திடப் பாய்ச்சி விட்டாள்.

வீடெல்லாம் இசையே; வீட்டில்
நெஞ்செல்லாம் மெருகே; நெஞ்ச
ஏடெலாம் அறிவே; ஏட்டின்
எழுத்தெலாம் களிப்பே; அந்தக்
காடெலாம் ஆடும் கூத்தே;
காகங்கள் குருவி எல்லாம்
மாடெலாம் இவ்வாறானால்,
மனிதர்க்கா கேட்கவேண்டும்?"

இது ஒரு அருமையான கவிதைச் சித்திரமல்லவா?

இனி நமது புதுக்கவியின் 'இசையமுதை'க் குடிப்போம். இந்த நூலில், இசை விறுவிறுப்புடன் சுழல்கிறது. உள்ளே வாழ்க்கையின் நிழல்கள் பிரதிபலிக்கின்றன. வண்டிக்காரன் முதல் பெண்கள் கடன் வரை, இசை துள்ளி வருகிறது; தமிழ்மொழி ஒரு உணர்ச்சி வேலாகவே வருகிறது; நாதம், எல்லா வாதங்களையும் முறியடிக்கிறது.

"தெள்ளும் தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ் மறவர்
யாம் யாம் யாம் பகையே!"

நிலவைப் பற்றிய சித்திரம் புதுமை மின்னுகிறது:

முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புது நினைவு
பாய்ந் தெழுந்தாற் போலே!

அழுத முகம் சிரித்ததுபோல்
அல்லி விரிந்தாற்போல்—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்
தொத்திக் கிடந்தாற்போல்

முழுமை நிலா! அழகு நிலா!
குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு!”

இது (SHELLEY) ஷெல்லியின் நிலவையே நினைவுறுத்துகின்றது. ஆனால் இது பாரதிதாசனின் சொந்தச் சித்திரம், அனுபவச் சித்திரம்.

‘மழை’ வனப்புடன் குமுறி வழிந்தோடுகிறது; இது ஒரு நாத மழையாகவே தமிழிசையில் தோன்றியிருக்கிறது என்றுகூடச் சொல்லிவிடலாம்.

“மழையே மழையே வா வா—நல்
வானப் புனலே வா வா; இவ்வையத்தமுதே வா வா!

....
தகரப் பந்தல் தணதண வென்னத்
தாழும் குடிசை சளசள என்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் குந்தங்கும் பய னென்ன மழையே.”

183086

‘பூனைப் பாட்டு’ பூனைபோல ஓடிவருகிறது: இது ஒரு இசைச் சுழல்; ஹாஸ்ய சித்திரம்: பூனையின் விசித்திர வடிவமும், அதன் குணசித்திரமும் இந்தப் பாட்டில் நன்கு அமைந்திருக்கின்றன,

“பூனை வந்தது பூனை!—இனிப்
போனது தயிர்ப் பானை!

....
எலி கொல்லப் பூனை தோது;—மெய்தான்
எங்கள் வீட்டில் எலி ஏது?”

183086

இதைப் படிக்கையில், இளங்கவி கீட்ஸ் (KEATS) பாடிய பூனைப் பாட்டின் 14 வரிகளும் ஞாபகத்திற்கு வருகின்றன (Sonnet to a Cat.) கீட்ஸின் கண்ணுக்கு, பூனையின் ஒளி தெறிக்கும் கண்களும், வெல்வெட் காதுகளும், மிருதுவான உரோம உடலும் தான் வனப்புடன் மிளிர்கின்றன. பூனை இதுவரை கொன்று தின்றிருக்கும் கணக்கற்ற எலிகளையும் சுண்டெலிகளையும் நினைந்து நினைந்து பாலகவி வியக்கின்றான்.

‘ஓவியக்காரன்’ பாட்டைப் பாடிப் பாருங்கள்:

“ஓவியம் வரைந்தான்—அவன் தன்
உள்ளத்தினை வரைந்தான்!
ஒல்லி இடை எழில் முல்லை நகை இரு
வில்லை நிகர் நுதல் செல்வியை வைத்தே
ஓவியம் வரைந்தான்.”

இது உண்மைக் காவியத்திற்கும் முற்றும் பொருந்தும் உண்மையல்லவா?

'பூக்காரி'யின் பூவும் பேச்சும், கற்பனை மண்டிய உணர்ச்சியலையாகவே உதயமாகின்றன. இயற்கைக் காதலின் எழில், கும்மாளம் போடுகிறது.

குழந்தையின் 'தாலாட்டு, ஒரு இசைத் தேன்.

பாரதி தாசன் பாட்டைப் படிக்கும்போது, இன்பம் துள்ளிக் குதித்து வருகிறது: சொற்கள், கவிதா ஜீவனுடன் துள்ளி விளையாடுகின்றன.

"உவகை உவகை உலகத்தாயின் கூத்து!—வந்து
குவியுதடா நெஞ்சில்
உவகை உவகை!"

நெருங்கிய நிலையில், இது பாரதியாரைப் பின்பற்றிய சந்தம்: இசையின் வேகம் அவ்வாறு தொனிக்கிறது. அனுபவித்துப் பாடினால் உண்மை தெரியும்.

புதுக்கவி பாரதி தாஸனின் கவிதை உண்மைக் கவிதைதான்—போலிக் கவிதையல்ல; மின்னற் கவிதைதான்—ஊமைச் செய்யுளல்ல; சொற்கள் உணர்ச்சியின் ஆழத்தில் பிறந்து கற்பனையில் இன்பமாய் விழிக்கின்றன; எளிய சொற்களும் சந்தப்புயலில் சிறகடித்து வாழ்கின்றன; சில இடங்களில் கொச்சைச் சொற்களால், இலக்கிய மின்சாரம் மங்கி விடுகிறது; பிரசார நோக்கத்துடன் பாடியிருக்கும் பாடல்களில், கவிதையின் சௌந்தரியம் மறைந்து விடுகிறது.

ஆனால் சில புலவர்கள் புனையும் செய்யுள்களில், கவிதை மணம் மருந்துக்குக்கூட அகப்படாத நிலை ஏற்பட்டுவிடுகிறது: உணர்ச்சியற்ற வறண்ட நடையில் யாப்பிலக்கணம் ஊளையிடுகிறதேயொழிய, வேறு எந்த வனப்பும் தெரியவில்லை; அவர்கள் இதயம் ஒரு மசானம், அவர்கள் மொழி ஒரு கலையிழந்த இடுகாடு; அவர்கள் எழுதுவது தந்தி நடையல்ல, தொந்தி நடை.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

"கோகலே! அவளும் ராஜபத்னி. இந்த விலங்குகள் எதற்கு? ஓடிவிடுவாளா?" என்ற சொற்கள் கனிவுடன் அவன் வாயினின்று எழுந்தன.

"ஓடி விடுவதானால் இந்த விலங்குகள் ஒன்றும் தடுத்துவிட முடியாது" என்று சொல்லியவளாய் விலங்கினின்று கையை உருவிக்கொண்டாள் அவள்.

பேஷ்வா மிகவும் அமைதியான குரலில் "தாயீ பாயீ! நீ ஏன் அனாவசியமாக, இவ்வளவு சேதங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமானாய்! இதில் யாருக்கு என்ன லாபம்?" என்றான்.

அவள் மிகுந்த வணக்கத்தோடு "மகராஜ்! தாங்கள் என் கணவனைக் கைதியாக்கினீர்கள். அவரை விடுவிக்க நான் வாள் எடுத்தேன். அவரை விடுவிப்பது என் கடமை அல்லவா! நீங்கள் சொல்லுங்கள்" என்றாள்.

கல்நெஞ்சனை அவன் கண்களிலும் கண்ணீர் துளித்தது. "அம்மா! நீதான் ஸதி. சாக்ஷாத் பவானி தேவி" என்ற சொற்கள் அவன் வாயினின்றும் எழுந்தன.

ஹுஹ்ஹஹ்ஹ என்னடீ! உடல் நடுங்குவதுபோல் நடுங்கி நிற்கிறாய்?...என்று ப்ரமாதமான ஆவேசமும் கோபமும்கொண்டு தேகம் பதைக்க ஆடியவாறு கூறி, ரத்தம் சொட்டுவதுபோல் கண்கள் சிவக்க உற்று முறைத்துப் பார்த்தாள்.

பார்வதியம்மாளின் ஆசாபாசமும் ஒடுங்கிவிட்டது. வீதியில் கூட்டமோ கூறத் திறமில்லை. எள்ளு விழ இடமின்றிக் கூடிவிட்டது. மகமாயினிடம் பக்தியும் ச்ரத்தையுங் கொண்டவர்கள் "தாயே! மகமாயி! எல்லாரையும் காப்பத்துடீயம்மா! இந்த ஊருலே ஒரு பழுதும் உண்டாக்காதேடி தாயே!" என்று கூறி தாடையில் போட்டுக்கொண்டு கைகுவிக்கின்றார்கள்.

அக்கம்பக்கம் உள்ளவர்கள் பார்வதியம்மாளின் ஊழலை யறிந்து "ஆ!" என்று திகைத்துப்போய் காரியுமிழ்கிறார்கள். "அப்படியா சமாச்சாரம்! உண்மை இதுதானா? ஐயோ! நிஜமாகவே பயித்தியம் என்றல்லவா நினைத்துவிட்டோம். அடீபாவி! உனக்கு எப்படிப்பட்ட சாவுதான் வருமோ! கடவுள் உனக்குச் சரியான கூலிதான் கொடுப்பார்; மகமாயி! உன்சாபம் வீண்போகாது" என்று பெரிதாகக் கத்தி இளப்பமாகப் பேசினார்கள்.

பார்வதியம்மாளின் உயிர் ஏற்கெனவே ஊசலாடிக்கொண்டிருந்த நிலைமையில் இந்த எதிர்பாராத பயங்கரமும் மகமாயியின் சாபமும் ஒன்றுகூடி அவளை யப்படியே பிணம்போலாக்கிவிட்டது. "தாயே! மகமாயி! தெரியாது செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு...என்மீது முற்றிலும் குற்றம் இருப்பினும் நீ மன்னித்துக் காப்பாற்றுடியம்மா! மகமாயீ!" என்று உள்ளுக்குள்ளேயே குளறிக்கொள்கிறாள். தொண்டைவெளிக்கிளம்பமாட்டேனென்கிறது.

"அகப்பட்டுக்கொண்டாரய்யா தும்மட்டிக்காய்பட்டர்" பலநாளைய திருடன் ஒருநாளில் அகப்படாமலாபோவான். செய்கிற காரியத்தைச் செய்துவிட்டுத் திருகத்திருக விழிக்கிற விழிப்பைப் பாரு. மனிதரை ஏமாற்றியதுபோல் கடவுளைக்கூட...மகமாயியைக்கூட ஏமாற்றிவிடலாம் என்று பார்த்தாள் பாவம். கெட்டிக்காரன் புளுகே எட்டு நாள்தான் என்றால் மோசக்காரியின் குட்டு வெளிப்படாமலிருக்குமா! வேணும்...நன்றாக வேண்டும். ஏழை என்ற ஒரே குற்றத்திற்காக பாவம், அந்த க்ருபாவதியின் குடும்பத்தையே சிதறவடித்த பாதகம் விட்டுப்போகாமல் வந்தது. வேண்டுமென்று கொலை செய்வதற்கொப்ப கிருபாவதியின் தாயாரைக் கொன்ற பலன் அவளுடைய சாபமும் வயிற்றெரிச்சலும் வீண்போகாமல் பிசாசாகவந்து பிடித்து ஆட்டவேண்டும். முன்னர் செய்த வினைகளை ஆனந்தமாக அனுபவிக்கவேண்டும்." என்று அக்கம்பக்கம் இருப்பவர்கள் பெரிதாக பார்வதியின் காது கேட்கவே திட்டி ஏசுகிறார்கள்.

யார் எதைச் சொன்னால் என்ன? பார்வதியின் உயிர் உடலிலிருக்கும் உணர்ச்சி இருந்தால்தானே மான அவமானம் தட்டப்போகிறது, திகிலும் பயமும் மகமாயியிடத்தில் நடுக்கலும் அவளை ஆட்டு ஆட்டென்று ஆட்டுவது ஒன்றுதான் அவளுக்குத் தெரிந்தது.

தெருவில் உள்ள இன்னும் சிலர்..."அம்மா! மகமாயித்தாயின் ஆவேசம் அதிகரிக்கிறதே...ஐயோ! இப்படி ஆத்திரம் அதிகரித்தால் ஊருக்கு அனர்த்தம் வருமே! ஏற்கெனவே ஊரில் மகமாயி மும்முரமாக விளையாடுகிறாளே! நீங்கள் முதலில் கற்பூரத்தைக் கொளுத்திவைத்து காலில்விழுந்து வணங்குங்களேன். அம்மா! மன்னிப்புக் கேட்டுக்கோ..." என்று தலாதலா தோன்றியதுபோல் பார்வதியைப்பார்த்துச் சொல்லி, மகமாயிக்காரியைப் பார்த்து, "தாயே! கோபம் தணிஞ்சுக்கோடியம்மா!" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டார்கள்.

அம்மைத்தாயாருடன் வந்த பூசாரி "உம்...பிடி...விபூதியை...மகமாயிக்கு வந்திருக்கும் ஆவேசம் முதிர்ந்துபோனால் ஊரே எரிந்துவிடும், உம்...விபூதியை அம்மன்மீது போட்டுவிட்டுக் கற்பூரத்தைக் கொளுத்தி கையில்கொடு...வந்துவிட்டது அனர்த்தம்" என்று கத்தினாள்.

வெடவெடவென்று நடுங்கும் கையுடன் விபூதியை வாங்கி மகமாயியின் மீது வீசும்போது உடம்பே கிடுகிடென்று ஆடியது. கற்பூரத்தைக் கொளுத்தி

வைத்துவிட்டு கன்னத்தில் போட்டுக்கொண்டு "தாயே! மகமாயி!...மகமாயீ"...என்று இரண்டு குரல்கள் கத்தினாள்; அதற்குமேல் அவள் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதால் சமாளிக்கமுடியாது தடாரென்று கீழே விழுந்துவிட்டாள். "ஐயையோ! மூர்ச்சையாகிவிட்டார்களா? இல்லாவிட்டால் மகமாயி உக்ரகம் தாங்காது அடித்துவிட்டாளா! ஒன்றும் தெரியவில்லையே!" என்று பொது ஜனங்கள் கூக்குரலிட்டார்கள். ஒரே கூச்சல் அமர்க்களம்போலாகிவிட்டது.

51

முரளியின் மனக் குமுறலில் அவனுக்கு இன்னது பதில் பேசுவதென்றே தெரியாது திகைப்பதற்குள் பெரிய டாக்டர் போய்விட்டதால், ப்ரமை பிடித்தவன் போல் சற்று நின்றான். "நாகராஜா!...நாகராஜா!...என்னை மன்னிப்பாயா! என் இதயம் இப்போதுள்ள நிலைமையில் இப்படியே வெடித்து உயிர் போய் விடக்கூடாதா! என்று தத்தளிக்கின்றது, என்னால் பேசவே முடியவில்லை"... என்று கதறினான்.

நாகராஜன் கண்ணிலும் நீர் ஒழுகியது. "வெளியழகின் மோகத்திலீடுபட்ட தன் விபரீதம் இதுதான் என்பதை இப்போதாவது உன் உள்ளம் அறிந்தால் அதுவே போதும். எந்த ஒரு மனிதனும் தான் செய்துவிட்ட குற்றத்திற்குத்தான் இதய பூர்வமாக வருந்தி பகவானை ப்ரார்த்தனை செய்தால் அதுவே அவன் செய்த பாதகத்திற்குத் தக்க ப்ராயச்சித்தமாகும். தான்செய்த குற்றத்தை குற்றமென்றறிந்தும் அதைப்பற்றிச் சிந்திக்காதிருப்பவன்தான் பாவியிலும் கொடும் பாவி; சண்டாளனிலும் பரமசண்டாளன் என்பது பெரியார்களின் சித்தாந்தம்." என்கிற வார்த்தைகள் மட்டும் நாகராஜன் வாயிலிருந்து வந்தன. முரளி கதி கலங்கியவன் வீட்டிற்குப் போவதையும் மறந்தான். நாகராஜனுடன் கூடவே இருந்து அவன் பூர்ண குணமடையும்வரையில் தானே கவனித்து வந்ததோடு கிருபாவதியைத் தேடுவதற்கான பலவித முயற்சிகள் செய்தான்.

இதற்கிடையில் பேபி, தன் தகப்பனார் ஓடிப்போன இடமே தெரியாதுபோனதால் கடன்காரர்கள் ஒரேமட்டாக பேபியின் தாயார்மீது படையெடுத்து வீடு வாசல் முதலிய சகல சொத்துக்களையும் ஜப்தி செய்ய வந்துவிட்டார்கள் என்றும் தாயாரும் சுந்தரபுரிக்கே வந்திருப்பதாயும், இச்சமயம் எப்படியாவது சகாயம் செய்துக் காப்பாற்றவேண்டுமென்றும் கடிதமெழுதினாள்....

கடனில் மூழ்கவிருந்த சில நிலம்புலன்களையும் வீட்டையும் கடனிலிருந்து முரளி மீட்டுக்கொண்டான். தான் எத்தனையோ சந்தோஷமாக புது உலக வாழ்க்கையை நடத்தி இன்புறுவதற்குச் செய்துகொண்ட மறுமணம் அவனுக்கு இப்போது பெருஞ்சுமைபோலும் தீராத வேதனையாயும் ஆகிவிட்டது. ஒரு நொடிப்பொழுதில் பேபி விசித்திரத்திலும் விசித்திரமாகக் கண்கட்டுவித்தையைப் போல் அத்தனை மாறுதலடைந்ததற்குக் காரணம் பிறகு தானாகவே தெரிந்து விட்டது. வாயில் வந்தவாறு உளறிக்கொட்டி, உதாசீனம் செய்துவிட்டு முன் பின் யோசியாது ஓடிய மனுஷி, விடியற்காலைக்குள் சூரிய உதயம்போல் ஞான உதயம் ஆகிவிட்டதையும் பிறகு புதை பாணம்போல் தாயார் வீட்டில் ஆபாஸக் குப்பைகள் கிளம்பியதையும் நினைக்க நினைக்க முரளியின் ஆத்திரம் அதிகமாயிற்றேயன்றிக் குறையவில்லை.

இம்மாதிரியான சமயத்தில்தான் தான் செய்துள்ள மகத்தான குற்றத்தின் பயங்கரமும் தன் தகப்பனார் தனக்கு புத்திமதிகள் எடுத்துரைத்தும் தான் அதை அலக்ஷியம் செய்ததும் மனத்தில் உறைக்கவாரம்பித்தது.

அவ்வாறு உறைக்கும்போதுதான் தன் தகப்பனாரையும் உயிருடன் பிரிந்துவிட்டோமே.. [illegible]னறிதெய்வம் என்கிற மகிமையறியாது பாழாகி விட்டோமே! நாம் கைப்பிடித்த மனைவியிடம் நமக்கு மனது வரண்டுபோகவும் தாம் க்ரகலக்ஷ்மியாகக் கொண்டுவந்த தகப்பனாருக்கு அவளிடம் அபரிமிதமான வாஞ்சையும் விலையிலா மதிப்பும் இருந்ததும் அதனால் அவர் தனது வாழ்க்

கையையே துறந்து சென்றதும் முரளியின் கண்முன்பு ஒவ்வொன்ருகத் தோன்றி படக்காக்ஷியளிப்பதுபோல் உணர்ச்சி உண்டாகியது.

தாயாரின் ராக்ஷஸத்தனமும் தகப்பனரின் உத்தம குணமும் தன்னுடைய மதியீனமும் பிரித்துப் பிரித்து அவன் மனத்தில் படபட, தகப்பனரைத் தேடாது இது பரியந்தம் காலத்தைக் கடத்திவிட்டோமே, சினேகிதனின் உண்மையன்புகூட தனக்கில்லாது போய்விட்டதே என்று ஒன்றன் பின் ஒன்ருக மனத்தை வாட்டுகிறது.

நாகராஜனுக்கு உடம்பு முற்றிலும் குணமாகி அவன் பழயபடியான நிலைமையை அடைந்தபோதிலும் அவனுடைய மனது முரளியிடம் பழய நட்புடன் பழக இடங்கொடுக்காது போயிற்று. ஏனே தானே என்று பழகி வந்தான். இதற்குள் நாகராஜன், முரளி இருவரும் கிருபாவதியைத் தேடுவதற்கான எத்தனையோ ப்ரம்ம ப்ரயத்தனம் செய்தும் பலனில்லாது போய் விட்டது. முரளியின் தகப்பனரைப்பற்றியும் ஒன்றும் தெரியவில்லை.

நாட்கள் ஓடு ஓடென்று ஓடுகின்றன. உலகத்தின் நிலைமையும் மக்களின் நிலைமையும் நிமிடத்திற்கு நிமிடம் மாறி வியக்கத்தக்க விதமாயும் விசனிக்கத்தக்க விதமாயும் ஆனந்தப்படக்கூடிய விதமாயும், பரிதாபப்படக்கூடிய விதமாயும், வேண்டும். வேண்டும். நன்ருக வேண்டும் என்று ஆத்திர மிகுதியால் கூறத்தக்க விதமாயும், சத்தியத்திற்கு அழிவில்லை, அசத்யம் அழிந்தே போகும் என்கிற தத்துவத்தை நிலைநாட்டும் விதமாயும் ப்ரபஞ்ச நாடகமேடையில் ஒவ்வொரு காக்ஷியாகத்தோன்றிக்கொண்டே வருவது இயற்கையின் நியதியல்லவா!

கிருபாவதியைத் தேடும் மும்முரத்தில் விச்வநாதனைவிட வேறு யாருக்கு அன்பு இருக்கப்போகிறது? அன்று அந்த தனிகரின் வீட்டிலிருந்து சென்றவர் ஒன்றுமே தோன்ருது குழம்பித் தவித்தார். தனிகர் சொல்லிய மகமாயியின் கோவிலில் போய் பார்க்கலாமா என்கிற ஒரு தடுக்கமுடியாத வேட்கை உண்டாகியது, நேரே விசாரித்துக்கொண்டு அந்த ஊருக்குச் சென்று மகமாயியின் ஆலயத்தில் உள்புறம் பிரவேசிக்கும்போதே...'கதி வேறுண்டோ கருணைகரியே!'... என்கிற அத்புதமான கானத்தின் மதுரம் செவியில் கேட்ட உடனே விச்வநாதனை தூக்கிவாரிப்போட்டது. "ஹா... என் செல்வ க்ருபாவதியின் குரல்போல் தோன்றுகிறதே!... உண்மையில் க்ருபாவதியின் குரல்தானு... ஏன் இத்தனை ஈன ஸ்வரம்?"... என்று நினைத்தபடியே அலையக் குலைய ஓடினர்.

க்ருபாவதி ஸ்நானம் செய்துவிட்டு மடியாக ஈரத் துணியுடன் நெத்தியில் பெரிய குங்குமப் பொட்டுடன் கண்கள் பஞ்சடைய தேகம் துரும்பிலும் துரும்பாக மெலிந்துபோய் உருக்குலைந்த நிலைமையில் ஸன்னிதானத்தில் படுத்துக் கிடக்கும் கண்ருவியைக் காண எத்தகைய கல்நெஞ்சுதான் கரைந்துருகாது?

சத்திரத்தின் கிழவி கண்ணீர் வழிய அவள் பக்கத்தில் உட்கார்ந்து அன்பு ததும்பும் குரலில்; "அம்மா! லக்ஷ்மீபாய்! இந்த ப்ரஸாதத்தைக்கூடவா சாப்பிட மாட்டாய்... உன் உயிர் போய்விடும்போலிருக்கிறதே. எத்தனை நாளைக்குத்தான் இப்படிப் பட்டினி கிடக்கப்போகிருயம்மா! அந்த கட்டிய கணவன் அவன் நாசமாய்ப்போக. பாழும் சண்டைக்குப் போனல்தான் என்ன? இப்படியா உன்னை மறந்துவிடவேண்டும்? அம்மா! லக்ஷ்மீபாய்! உனக்கு யாராவது தூரத்து பந்துக்கள்கூடவா இல்லை? இப்போதாவது விலாசத்தைச் சொல்லேன் நான்போய் அவர்களை அழைத்துவருகிறேன். உன் பரிதாபம் என்னல் கண்டு சகிக்க முடியவில்லையே! இந்த மகமாயி உன்னை ரக்ஷிக்கவேண்டுமேயன்றி மனிதர்களின் ஆதரவை நீ அடியோடு பெருதவளாயிருக்கிருயே!" என்று கூறும் பரிதாபத்தைக் கேட்டுக்கொண்டு சென்ற விச்வநாதனின் உள்ளம் பதினயிரம் சுக்கலாக வெடித்துவிடும்போலாகிவிட்டது.

கிருபாவதியின் காக்ஷி அவர் இதயத்தைத் துளாவிச் சித்திரவதை செய்கிறது. தன் கணவன் சண்டைக்குப் போய்விட்டான் என்ருல் ஒருவிதமான சந்தேகமும் இல்லை என்கிற யோசனையினல் இத்தகைய மகத்தான

பொய்யைச் சொல்லிக்கொண்டு அந்த அயோக்யனைக் காப்பாற்றி வரும் புண்யவதிக்கு இத்தகைய பரிதாபமா! என்று நினைக்க அவரால் தாங்கவே முடியாது எல்லைகடந்து வந்துவிட்டது.

"அம்மணீ! குழந்தாய்... கிருபாவதீ!"... என்று பெரிய குரலில் கூறிய படியே கண்ணீர் பெருக அவளருகில் ஓடிவந்து உட்கார்ந்து அவள் முகத்தைத் தடவினர்.

இந்த குரலைக் கேட்டதும் கிருபாவதியின் தேகம் கிடுகிடென்று நடுக்கலுற்று ஆடியது... கண்களைத் திறக்கமாட்டாது திறந்து பார்த்தாள். தாடியும் மீசையும் வளர்ந்து ரிஷியைப்போல் காணப்பட்டதால் அவளுக்கு அடையாளமே தெரியாது திகைத்தாள்.

விச்வநாதன் விம்மி விம்மி அழுதவாறு "என் செல்லமே... க்ருபாவதீ... என்னைத் தெரியவில்லையா... முன் வேஷம் குலைந்திருப்பதில் அடையாளம் தெரியவில்லையா! நான் விச்வநாதனல்லவா! உன் மாமனரல்லவா... இதோ பாரு"... என்று அன்பு வெள்ளம் கரைபுரளக் கேட்டார்.

'ஹா... மாமாவா!... மாமாவா!... நிஜமாகவா... உங்கள் பிள்ளை சவுக்யமா... உங்கள் பேத்தி சவுக்யமா... அம்மா சவுக்யமா?'... என்ருள். அதற்குமேல் அவள் இதயத்தில் பேச்சுக்கொடுக்கும் சக்தி ஒடுங்கிவிட்டது. நரம்புத் தளர்ச்சியால் அயர்ந்துபோய் கண்கள் மூடிவிட்டன.

சத்திரத்துக் கிழவிக்கு இந்த சம்பவம் பெருத்த ஆச்சரியமாயும் விளங்காத பூடகமாயுமிருப்பதால்... விச்வநாதனை உற்றுப் பார்த்து வியப்பும் திகைப்பும் கலந்த பார்வையுடன்... "அடாடா... நீங்க மாமனரா! மாமனர் கல்லுபோல இருந்தா இந்த பச்சைக் குழந்தையை இத்தனை காலமாகப் பரதேசியிலும் பரதேசியாய், ஆண்டியாய், பால சன்யாசினியாய் அம்மன் கோயிலே கதியாக விட்டுவிட்டீர்கள். தனக்கு யாருமே மனிதர்கள் கிடையாது, திக்கில்லாதவள், தன் கணவனும் சண்டைக்குப் போய்விட்டான் என்றல்லவா சொன்னள். உத்தமி என்ருல் நளாயினிக்கும் அருந்ததிக்கும் சமமாகச் சொல்லக்கூடிய புண்ணியவதியை எப்படிச் சாமி இம்மாதிரி பரதேசியாய் விட்டுவிட்டீர்கள். உண்மையில் உங்க மகன் சண்டைக்குப் போனனை? அதுவும் பொய்யா?" என்று வெடுவெடுப்பாகக் கேட்டாள்.

இது கேட்ட விச்வநாதனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாது தத்தளிப்புண்டாகியது. ஒரு உத்தமியின் உள்ளத்தைத் துடிக்கச் செய்த பரம சண்டாளர்களான மனைவியும் மகனும் சேர்ந்து செய்த சதியை வயிற்றெரிச்சல் தீரச் சொல்லிவிடுவதே சரி என்று ஒரு மகத்தான ஆவேசம் கிளம்பியது. முடுக்கிவிட்ட மெஷின்போல் மளமளவென்று சகல விஷயங்களையும் ஒன்று விடாது கூறிவிட்டு, "அம்மா! இந்த அக்ரமத்தைச் சகிக்கமாட்டாமல் தான் இந்த பரிசுத்தவதியைத் தேடிக்கொண்டு ஊர்ஊராய்த் தெருத்தெருவாய் தேடியலைந்துத் தவித்தேன். அந்த மகாபாவி இவளுக்குப் பயித்தியமென்று கூறியதலைல்தான் நான் சற்று ஏமாந்துவிட்டேன். இந்த உத்தமியும் தன் கணவனின் க்ஷேமத்தையும் சந்தோஷத்தையுங் கோரி பயித்தியமாக நடித்திருக்கும் ரகஸியம் இப்போதல்லவா தெரிகிறது. இந்த ரகஸியம் எனக்கு முன்பே தெரிந்திருக்குமாயின் அந்த கல்யாணத்தை நிமிஷமே நானே நிறுத்தி அவர்களை பஜித் செய்திருப்பேனே! எல்லா பாதகமும், என்னுடைய கர்மாவெல்லாம் ஒருருவாகி உருண்டு திரண்டு மனைவி என்கிற ரூபத்திலும் மகன் என்கிற ரூபத்திலும் வந்து விளைந்திருக்கிறது...

என்று கூறும் விஷயங்களைக் கேட்கக் கேட்க கிழவியின் ஆச்சரியம் கரைபுரண்டது. "என்ன அதிசயம்! நீங்கள் சொல்வதெல்லாம் நிஜமானதா! அல்லது ஏதோ கற்பனைக்கதை என்றும், நாவல் கீவல் என்றும் சொல்கிருர்களே அப்படிப்பட்டதா? என்ருல் நம்பவே முடியவில்லையே! இத்தகைய மனிதப் பிறவிகள்கூடவா உலகில் இருக்கிருர்கள். இந்த மகமாயிதான் அவர்

களுக்குக் கூலி கொடுக்கவேண்டும். ஐயோ ! என்ன பொறுமை... என்ன உத்தம குணம்! இத்தகைய அத்புதமான உள்ளழகைக் காட்டிலுமா வெளியழகில் மோகம் கவிழ்ந்துவிட்டது'' என்று வெகு கேவலமாயும், இளப்பமாயும் கூறினள்.

விச்:—உம்... நான் செய்த பாவம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லிவிட்டேனே... இனி திருப்பித் திருப்பிச் சொல்வதில் என்ன லாபம். என் க்ரகலக்ஷ்மி ஏன் இப்படிக் கிடக்கிருள். காரணம் ஏதாவது தெரியுமா? இத்தனை நாட்களாக இங்கேயா இருக்கிருள்?...

கிழவி:—உம்... அத்தனை பூதமும் பைசாசமும் பயமுறுத்தும் பயங்கர குகையிலிருந்து தப்பி வந்ததும் இங்குதான் வந்தாள். மகமாயி தன் கருணையினல் ஏதோ ரேடியோவோ, ஏதோ சொல்கிருர்களே ! அதில் ஒரு உயர்ந்த உத்யோகத்தைக் காட்டியருளினள். அதை வகித்ததன் பலன் மகமாயிக்கு நல்ல தர்ம கைங்கர்யம் செய்துவந்தாள். மறுபடியும் ஒரு மாதத்திற்குமேலாகிறது திடீரென்று வந்து இப்படியே கிடக்கிருள். நான் பலவந்தம் செய்து ஏதாவது சொல்ப ஆகாரத்தைக் கொடுத்து வருகிறேன். தன்னைப்பற்றி யார் தேடி வந்தாலும் இல்லை என்று சொல்லும்படிக் கூறிவிட்டாள். காரணம் என்னவோ! ஒன்றுமே தெரியவில்லை—என்ருள்.

விச்வநாதனின் மனது எப்படித்தான் துடிக்கும்? "அம்மா! க்ருபாவதீ! க்ருபாவதீ! இதோ பாரு... என்னம்மணீ! கண்ணைத் திறம்மா!" என்று கண்ணீர் பெருகக் கூப்பிட்டுத் தண்ணீரை முகத்தில் தெளித்து விசிறினர், தண்ணீரை உள்ளுக்கும் வார்த்தார். சிறிது நேரத்திற்குப் பிறகுதான் கிருபாவதி கண்ணைத் திறந்தாள். "மாமா!... நீங்கள்மட்டும் வந்திருக்கிறீர்களா! அவரும் வந்திருக்கிருரா?... அவருக்கும் நான் இங்கிருப்பது தெரியுமா! உங்களுக்கு எப்படித்தெரிந்து ஏன் இங்கு வந்தீர்கள்? இந்த பாபாத்மாவை ஏன் வந்து பார்க்கிறீர்கள்?'' என்று புலம்பியவாறே கேட்டாள்.

விச்:—குழந்தாய்! என்னை பகவான் சோதித்து இதுவரையில் பரீக்ஷித்தது போதாதா! நீயும் என்னை சோதிக்கவேண்டுமா? ஏதோ, நடந்தது நடந்துவிட்டது. அப்பேர்ப்பட்ட லோகமாதாவாகிய ஸீதா பிராட்டியே ஸ்ரீராமனைப் பிரிந்து பல துன்பங்களை அனுபவித்தாள். அப்படிக்கிருக்க நாம் எம்மட்டும்? நடந்ததைக் கனவாக எண்ணி என்னேடு வீட்டுக்கு வந்துவிடம்மா! பட்ட துன்பங்கள் போதும். இனி உன் கைமேலாக அந்த முரட்டுக்கழுதையை நான் நடக்கச் செய்கிறேன்... கிருபாவதீ!... என்னம்மா யோசிக்கிருய்?... என்று அன்பொழுகக் கேட்டார்.

க்ருபாவதி அத்தனை துர்ப்பலத்திலும் கபகபவென்று ஒரு சோகச் சிரிப்பு சிரித்தாள்: அச் சிரிப்பின் எதிரொலி அவ்வாலயம் பூராவும் சுற்றிக்கொண்டது போல் கிடுகிடென்று ஒலித்தது.

மாமா! சாக்ஷாத் லோகமாதாவின் செய்கை நம்போன்ற பாமரமக்கள் பின்பற்றி நடக்கவேண்டியதற்காக நடந்த சம்பவமாகும். கேவலம் குப்பைப் புழுவிற்குச் சமதையான என் பாப சரிதை எதற்கு உலகமறியவேண்டும்? அப்படியே தாங்கள் சொல்லியபடியே வைத்துக்கொள்வோம். சாக்ஷாத் ஸீதா பிராட்டியை இரண்டாவதுதரம் அனுப்பிய உபமானத்தை வைத்துக்கொள்ளுங்கள். இனிமேல் இக்கட்டைக்கு மகமாயியின் சன்னிதானத்தை விட்டு வேறு இடம் கிடையாது. மாமா! ஆயாஸப்படவேண்டாம். என் கணவர் சவுக்யமாயும் சந்தோஷமாயுமிருந்தால் போதும்'' என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறினள்.

ஆழமாகப் பதிந்து கிடக்கும் வைராக்யமும் வாழ்க்கையில் வெறுப்பும் எதையும் லக்ஷ்யம் செய்யாத ஒரு அதீதமான போக்கும் அவள் குரலில் அவள் வார்த்தையில் பயங்கரமாக ஒலித்ததையறிந்த விச்வநாதனின் உள்ளம் சுக்கு நூருக வெடிப்பதுபோலாகியது.

52

முரளியின் அழகு வெள்ளத்தை அள்ளிக்காட்டும் புகைப்படங்களில் பெரிதாக என்லார்ஜ் செய்திருந்த படத்தை முரளி உற்று உற்றுப்பார்த்தான். பக்கத்தி

லேயே இருக்கும் நிலைக்கண்ணாடியில் தனது இப்போதிய உருவத்தையும் இமை இசைக்காது பார்த்தான். கண்ணாடியில் கண்ட தனது உருவத்தின் தோற்றம் அவனைத்தூக்கி வாரிப்போட்டது. அவனால் அவன் கண்களையே நம்பமுடியவில்லை.

என்ன! ..இவனா முரளி! முரளி!...கண்ணாடியில் நிற்பவன் முரளியா...உண்மையில் முரளியா...அழகுக்கு அடிமையான முரளியா இவன்...ஐய்யோ! உயரவிருக்கும் புகைப்படத்திறகும் கண்ணாடியிலிருக்கும் கோரஸ்வரூபத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்யாஸமல்லவா இருக்கிறது?

என்னமாறுதல்!...முரளி! நீ உயிருடன் இருக்கும் போதே உன்னழகு இறந்துவிட்டதா...செத்துவிட்டதா...உன் கதுப்பு நிறைந்த, மல்கோவா மாம் பழம்போன்றிருந்த கன்னத்தின் கதுப்பெங்கே...பூர்ண சந்திரனைப்போன்று வட்டவடிவமாக விருந்த உனது முகத்தின் ரவுண்டு எங்கே! சப்பி உமிழ்ந்த மாங் கொட்டையைப்போன்று விகாரமாகவா ஆய்விட்டது!...

அடாடா! கருத்து, அடர்ந்து சுருண்டு வளைந்திருந்த உனது கேசம் ஒவ்வொன்று வெளுத்தும் சிலது செம்பட்டையாகியும் உதிர்ந்தும் அழகற்றும் மண்டை தெரியும்படியாகவும் ஆய்விட்டதே! கழுத்து இத்தனை உயரமா...கழுத்து இலும்பு இவ்வளவு தூக்கி நிற்கிறதா அடடா...முரளீ...முரளீ! இந்த அழகு என்றும் சாச்வதமல்ல என்றும் ஒருநாள் நரையும் கிழத்தனமும் வந்தேதீரும் என்றும் தீர்க்கதரிசிபோல் கிருபாவதிசொல்லியதை நீ கவனித்தாயா! ஏ முரளீ! ஏண்டா ஊமைபோலிருக்கிறாய்?...கவனித்தாயா...அந்தவாக்கு இத்தனை விரைவிலேயே பலித்துவிட்டதே...என்று பித்தன்போல் பிதற்றுகிறான்.

தன்னுருவைக்கண்டு தானே வெறுத்தும் அசங்கியப்பட்டும் கோபித்தும் தாண்டவமாடினான். இதே நிலைமையில் தன்னைப்பார்ப்பவர்கள், முன்பு சவுந்தர்ய சுகுமாரனை இருந்தபோது எடுத்த படத்தைப்பார்த்தால் கட்டாயம் அது யாரோ இதுயாரோ என்றுதான் கூறுவார்கள். முரளீ! உன் பழைய உருவத்தை நீ இனி இப்படத்தில் கண்டு களிப்பதைத்தவிர நேரில் பெறமாட்டாய்...பெறமுடியாது. தலைவலிக்குக் காரணம் பல்லின் கோளாறுதான்; பல்லைப்பிடுங்கிவிட்டால் சரியாகிவிடும் என்று டாக்டரும் கண்டிப்பாய் சொல்லிவிட்டார். அதையும் பிடுங்கிவிட்டால் அடாடா! உன்னழகை என்னவென்றுதான் வர்ணிப்பது?" என்று வெகுவாய் மனத்தை நொந்துகொண்டான்.

க்ருபாவதி அவன் கண்முன்பு தோன்றி "அழகுவெள்ளமே!...நீயா இப்படியிருக்கிறாய்? இந்த அழகுக்கா என்னை விலக்கி வெரட்டினாய்? என் சாபம் பலித்ததா! என் வயிற்றெரிச்சல் வீணேபோயிற்றா பார்த்தாயா?" என்று வஞ்சம் தீரப்பேசுவது போன்ற ஒரு உருவெளித்தோற்றம் உண்டாகியது. அப்படியே அலறி நடுங்கும் சமயம் தபால்காரன் கடிதமொன்று கொடுக்க அதைப்பிரித்துப் படிக்க வாரம்பித்தான்.

"சிரஞ்சீவி முரளிக்கு,

நீ குழந்தையாயிருக்கும்போதுமுதல் உங்கள் வீட்டில் சமையல்செய்து கொண்டு உன் தாயாரின் அட்டகாஸத்திற்கெல்லாம் பொறுமையாயிருந்த கோமதியை நீ மறந்திருக்கமாட்டாய். நான் உன் தாயாரின் கொடுமை தாங்காது போய்விட்டபிறகு என் காலக்ஷேபத்தை எப்படியோ பகவான் நடத்தித்தான் வருகிறான். ஒரு குறைவுமில்லை. நான் என் எஜமானியம்மாளுடன் தேசயாத்திரை செய்துவந்தேன். பழகிய தோஷத்தினால் உங்களையெல்லாம் பார்க்க ஆசையுடன் உன் வீட்டிற்கு வந்தேன்.

வயித்தெரிச்சல்கொள்ளையை என்னென்பேன்? உங்கள் வீட்டு பாரதக் கதை முற்றும் இப்போதுதான் அறிந்தேன். உங்கம்மாவுக்கு திடீரென்று பயித்தியம் பிடித்துவிட்டதாம். 'மகமாயீ! நான் பண்ணதெல்லாம் தப்புதான்; மகமாயி! நான் பண்ணதெல்லாம் தப்புதான்'...என்று யாரைப்பார்த்தாலும் கூறிக் கன்

னத்தில் அடித்துக்கொண்டு சேவிக்கிருள். கம்பம், கதவு, சுவர் முதலிய எதைப் பார்த்தாலும் இதே பாடத்தைப்படித்துச் சேவிக்கிருள்.

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்கிற பழமொழிப்படி வேலைக்காரர்கள் வீட்டிலுள்ளதை சூறைக்கொள்ளையிட்டுக்கொண்டுபோகிருர்கள். பழகிய தோஷத்தினல் எனக்கு சகிக்கமுடியவில்லை. நீ உடனே வந்து இந்த பரிதாபத்தைப்பார்த்துப் பரிகாரம் தேடி வீட்டையும் காப்பாற்று. நான் இப்போது உன் வீட்டில்தான் இருக்கிறேன். முற்பகல்செய்யின் பிற்பகல்விளையும் என்பது சரியாகிவிட்டது. உடனே வரவும். கோமதி''

இதைப்படித்த முரளிக்கு மூளை கலங்கியே போய்விட்டதாகத் தோன்றியது. ''அஹ்ஹ்ஹ்ஹ!... என்று ஒரு விகாரச்சிரிப்புச் சிரித்துக் கையைப் பிசைந்தான், பல்லை நறநறவென்று கடித்தான். தலையைப்பிச்சிக்கொண்டான்.

இந்த கூச்சலைக்கேட்டு ஓடிவந்த பேபி, கோரச்செய்கையைக் கண்டு ''என்ன ! என்ன நடந்தது...என்று பதறிப்போய்க்கேட்டாள். முரளி சற்று ஆவேசம் அடங்கியவனுகி சமாளித்துக்கொண்டு, ''ஒன்றுமில்லை. வினைவிதைத்தவன் வினையை அறுத்தான். தினைவிதைத்தவன் தினையை அறுப்பான் இதுதான். என்று கூறிவிட்டுச் சடக்கென்று வெளியே போய்விட்டான் அவனுடைய மனோவேதனைக்கு எல்லை வைத்தே கூறமுடியாது.

பித்தன்போல் நடந்து செல்கையில் நாகராஜன் தலைதெறிக்க ஓடிவந்து முரளியைப்பார்த்து...முரளீ ! முரளீ !...''எங்குபோகிருய்? ஏன் இப்படி இருக்கிருய்... இதோபாரு. இந்த பத்திரிகையில் ஒரு அத்புதமான விஷயம் வந்திருக்கிறது. அதை உனக்குக் காட்டுவதற்காகத்தான் எடுத்துக்கொண்டு ஓடிவருகிறேன். வா! வீட்டிற்கு வா''...என்று அழைத்தான்.

முரளியின் தவிப்பான நிலைமையில் நிலைகலங்கிப்போய் ''என்ன விஷயம்! எங்கம்மாவுக்குப் பயித்தியம்பிடித்துவிட்டதே. அது பத்திரிகையிலும் வந்திருக்கிறதா!'' என்றுன்.

இது கேட்ட நாகராஜன் ''என்னது !...உங்கம்மாவுக்குப் பயித்தியமா ! இதென்னடா புதிய சரடுவிடுகிருய்! ஒன்றுமில்லாதிருந்த உத்தமியைப் பயித்தியமென்று கூறி குடும்பத்தை அதம்செய்தாய்விட்டது. புண்ணியவதி தனக்கே பயித்தியம் என்றுகூறி இன்னும் என்ன அனர்த்தத்தை விளைவிக்கப்போகிருள்! இந்த செய்தியை உனக்கு யார் கூறியது! ஈசன் கிருபையில் அதுமாத்திரம் உண்மையாக இருந்தால் என்னிதயம் எப்படித்தான் பொங்கிப் பூரிக்கும் தெரியுமா? அதைச்சொல்லவே என்னல் முடியவில்லை. தான்செய்த கொடுமைக்குத் தான் உடனே ப்ரதிபலனை அனுபவிப்பது என்பது சில இடத்தில்தான் பலிக்கிறது. சில இடங்களில் பலிப்பதில்லை. அந்த மகா உத்தமியான கிருபாவதியின் வயிறெரிந்த சாபம் பலித்தால்போதும். நெருப்பை ஈ மொய்த்தது என்று அந்த புனிதவதியையும் என்னையும் பார்த்துச் சொல்லிய நினைவு உடனே அழியவேண்டாமா?... அப்படி அழிந்தால்தான் கடவுள் உண்மையில் இருக்கிருர் என்று அர்த்தம்.''

என்று தனது இதயத்தில் பொங்கும் ஆவேசத்தை எடுத்துக்காட்டுவது போல் கூறினன். முரளிக்கும் நாகராஜன் கூறுவது எல்லாம் பொருத்தமாகவே தோன்றியது. அவனை முதுகில் தட்டிக்கொடுத்தபடியே, ''நண்பா ! கடவுள் நீ சொல்கிறபடி உண்மையாயிருப்பவரானல் என்னையல்லவா முதலில் தண்டிக்க வேண்டும்? ஆம் கட்டாயம் என்னை பழிக்குப்பழி வாங்கியே தீருவார். விடமாட்டார், இதோ பாரு இக்கடிதத்தை'' என்று கோமதி எழுதியிருந்த கடிதத்தைக் கொடுத்தான்.

நாகராஜன் அதைப்படித்ததும் ''ஆஹாஹா ! என்ன சமாச்சாரம்... என்ன சந்தோஷச்செய்தி! முரளீ! நான் இப்போது இந்த நிலைமையில் அந்த மகாபாவியைப்பார்க்கவேண்டும்போலிருக்கிறதே!... என்று பதைக்கப்பதைக்கக் கூறிப் பின் ''முரளீ! இந்த சந்தோஷச்செய்தியைவிட அதிகமான செய்தி இதோ இந்த

பத்திரிகையில் இருக்கிறது பாரு... உடனே பாரு'' என்று கூறிக்கொடுத்தான்; முரளியும் படிக்கவாரம்பித்தான்.

ஸர்வம் மதுரகீத மயம்

பூர்வசரித்திர மீராபாயைப் புத்தகத்தில் படித்தும் நாடகம் ஸினிமா முதலியவற்றில் பார்த்தும் ஆனந்திக்கின்றோம்; ஆனால் கலிமுற்றிய இக்காலத்திலும் ஒரு மீராபாயை ப்ரத்யக்ஷமாகக் காணும்போது மெய் சிலிர்க்கின்றது. பக்தியில்லாத கட்டைகளுக்கும் பக்திப்ரபாவம் இதயக்கடலில் தானகப்பொங்கி வரும் சக்தி உண்டாகிறது. அந்த மீராபாயின் நினைவை இந்த மாதரசியைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் தானகை நினைப்பூட்டுகிறது.

கையில் ஒரு தம்புரா; பக்கவாத்தியமாக இரண்டு பெண்மணிகள் மிருதங்கமும் பிடிலும் வாசிக்கிறார்கள். அடாடாடா!... அந்த அற்புத கானத்தின் மதுரத்தை எழுத்தில் எழுதிவர்ணிக்கமுடியாது. பட்டமாமும் பால்வடியும்; புண்பட்ட நெஞ்சமும் அமிருதம் தோய்ந்ததுபோலாகும். கண்ணைத்திறந்து எதிரிலுள்ள மனிதரைக்கூடப் பார்ப்பதில்லை. ஒரு க்ருஷ்ணவிக்கிரகம் உண்டு; பரிசுத்தவதி உண்டு. அவளுக்குத் தகப்பனரோ என்னவோ கூடவே இருக்கிறார். அவரைப்பார்த்தால் பரமபாகவதராய் ரிஷியைப்போலிருக்கிறது. ஒரு சிறிய கிருஷ்ணன் கோயில் கட்டிக்கொண்டு அதில் வாஸம் செய்கிறார்கள்.

ஏராளமான பக்தகோடிகள் வந்து பஜனையில் கலந்துகொள்வதோடு டோல உத்ஸவம், வஸந்த உத்ஸவம், உரியடி உத்ஸவம், தவனேத்ஸவம் முதலியன தாமே தமது செலவில் சில தனவான்கள் செய்து இன்புறுகிறார்கள். அந்தம்மாள், ஒரு தேவதையாகவே... இல்லை. இல்லை. கலியுக மீராபாயாகவே எல்லோருக்கும் பிரகாசிக்கின்றார்கள். ஏராளமான காணிக்கைகள் பக்தர்கள் சமர்ப்பிப்பதை அந்தம்மாள் அத்புதமான முறையில் தருமம் செய்கிறார்கள்.

அதாவது ஏழை சுமங்கலிகளுக்கு; அதிலும் முக்கியமாக கணவனல் நிராகரிக்கப்பட்ட பெண்களுக்கே பூரண ஆதரவளித்து உதவிசெய்கிறார்கள். நிராதரவாயுள்ள சிலரை அவர்கள் பஜனையிலும் சேர்த்துக்கொண்டு சத்மார்க்கத்தை உபதேசித்து நல்ல பக்திவைராக்யத்தை உண்டாக்கி அதனல் அவர்களைப் பாவனமாக்குகிறார்கள். இந்த முறையைமிகவும்போற்றி ஜனங்கள்மகிழ்கிறார்கள்.

பத்திரிகை நிருபன் என்கிற ஹோதாவில் நான் போய் அந்தம்மாளை தரிசித்துப்பின். "கணவனல் விலக்கப்பட்டவர்களுக்கே நீங்கள் ஆதரவுகாட்டுகிறீர்களே: கணவன் ஆதரவில்உள்ள ஏழைகளை நீங்கள் ஆதரிக்கக்கூடாதா?'' என்று கேட்டேன். அதற்கந்தம்மாள் ஒரு அத்புதமான சிறியப்ரஸங்கம்போல் பதிலளித்தார்கள். அதாவது, கணவனின் ஆதரவிலுள்ள எவருக்கும் அந்த கணவனே பிச்சை எடுத்தாகிலும் தன் மனைவியின் மானத்தை,ப்ராணத்தை,காக்கக்கடமைப்பட்டிருக்கிறன். அதோடு சில இடங்களில் கணவனுடைய அனுமதியுடன் நிர்ப்பயமாய் நிச்சிந்தையாய் வேலைசெய்து பிழைக்க இடமிருக்கிறது. 'மங்கையருக்கு மணாளனே கடவுள்' என்கிறபடி அவளுடைய கணவனின் பாதுகாப்பில் அவள் பத்துயானையின் பலத்தைப் பெறுகிறள். அதோடு, 'வாழாவெட்டி' என்கிற மகத்தான இழிவு கவசம் அவளை மலைபோல் அழுத்தாததினல் அவள் சாஸ்திரத்திற்கு ஏற்ற சதியாய் விளங்குகிறள். அவளைப் பல பொது ஜனங்களும் ஆதரிக்கத் தியங்கமாட்டார்கள். வேலை செய்யும் இடங்களிலும் அவளை கௌரவமாகவே பார்த்து நடத்துவார்கள். கச்சமிச்சாவென்று வாலாட்டிப் பட்டப் பெயர்களைச் சூட்டியும் தாமாகவே அவளைக் கெடுத்துக் குட்டிச்சுவரடித்து அத பாதாளத்தில் தள்ளியும் வேடிக்கை பார்க்கமாட்டார்கள். புஷ்பத்தோட்டத்திற்கு வேலி பிரதானம்போல் பெண்களுக்குக் கணவனின் பலமே பிரதானம்.

அத்தகைய ச்ரேஷ்டமான கணவன்... அந்தோ... நினைக்கவே அங்கம் பற்றி எரிகிறது. அக்கினி சாக்ஷியாகக் கைப்பிடித்த கணவன், ஆயுள் பரியந்தம் நிழல் போலிருந்து தனது சதியை ஆதரிக்கவேண்டிய கணவன்... கை விட்டுவிட்டால்?

அடாடாடா...பரிதாபம். பரிதாபம்...நினைக்கவும் பரிதாபம், அவர்களின் கதியைக் கூறமுடியுமா! வேலியில்லாப்பயிரை அழிக்கப் பல மிருகங்கள் காத்திருப்பதுபோல் வேலியாகிய கணவனில்லாத பெண்களைக் குட்டிச்சுவரடிக்கப் பல ஆத்மாக்கள், மாமிசத்துண்டுக்கு வட்டமிடும் கழுகுபோல் வட்டமிட்டலைந்து பலவித உபத்திரவங்களை உண்டாக்கக் காத்திருக்கும்.

வாழாவெட்டி என்கிற பயங்கர மலை அவர்களை அழுத்துவதால் அவள் சுமங்கலியாக இருந்தால்கூட சுமங்கலி பிரார்த்தனை செய்வதற்கும் சுமங்கலிகளுக்கான தான தருமங்கள் செய்வதற்கும் சாஸ்திரத்தில் எடுக்காத முண்டமாகிவிடுகிறாள். மாமியார் வீட்டிலும் இழிவு, தாயார் வீட்டிலும் கூறத்திறமற்ற இளைப்பத்தையடைந்து பரிதவிக்க நேருகிறது.

அத்தகையவர்களில் சிலர் மனம் முறியும் வேகத்தில்—உலகம் போகும் போக்கில் - கூடச் சேரும் சகவாஸத்தின் விபரீதத்தில் தன் மனோ திடம் குன்றி கெட்டுப்போயாவது தாம் சுகப்படலாம் என்கிற அதீத முறையில் காலை வைக்க நேருகிறது. சிலருக்குத்தான் இந்த மனமாற்றின் வேகம் தீர வைராக்யத்தையளிக்கின்றது. எனினும் அவர்களையும் வசை பாணமும், வம்பு அம்புகளும் தாக்காமலில்லை. இதுபோல் எத்தனையோ பயங்கரம் அவர்களைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. அத்தகையவர்களை ஆதரிக்கத்தான் மனிதர்களில்லை. சுமங்கலிகளுக்குக் கொடுப்பதுதான் புண்ணியமென்ற முறையில் நான் புண்ணியம் சம்பாதிக்க விரும்பவில்லை. புண்ணியமும் பாவமும் என்னப்பன் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் திருவடிகளுக்கே அர்ப்பணம். சகலமும் அவன் கையில் இருக்கிறது. உண்மையில் தாகிக்கின்றவனுக்கு தாக சாந்திக்கு நல்ல தீர்த்தம் கொடுப்பதும் நல்ல பசியுடன் துடிப்பவனுக்கு அன்னம் கொடுப்பதும் எத்தனை முக்யமோ, அத்தனை முக்யம் இத்தகைய நிர்க்கதியான மங்கைகளுக்கு உதவி செய்வது என்பதுதான் எனது நம்பிக்கை. ஆகையால் அவர்களுக்கே நான் செய்துவருகிறேன்.

இது அவர்களுக்கு ஸ்ரீமந்நாராயணனின்திருவடிதான் நம்மைக்காக்கும் மூலப்பொருள் என்பதை அறியச் செய்வதற்கான ஒரு சிறிய வழியைக் காட்டுகிறது ஒன்றுதான் கருத்து. அவனைத்தவிர வேறு தஞ்சமில்லை. அவனை நம்பி அனவரதமும் அந்தக்கரண சுத்தியுடன் பஜித்தால் பிறவிக்கடலை நீந்தி துன்பச்சுழலில் உழன்று சாகும் கஷ்டம் நீங்கி, அவன் திருவடிக் கமலங்களாகிய கரையை அடைந்து என்றும் நீங்காத பேரின்பத்தை அடையலாம். சாச்வதமான பொருள் அவன் திருவடிதான்; அதை யடைவதற்கு அவனுடைய அத்புதமான நாமங்களையும் லீலாவைபவ விநோத ஸாரங்களையும் அழகாக அமைத்த கீர்த்தன பஜனை செய்துகொண்டிருந்தால் அந்த தாரக நாமத்தின் மகிமையே நமக்கு மோக்ஷசாம்ராஜ்யத்தைக் கொடுக்கும். 'சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ; அஹம் த்வா சர்வபாபேப்யோ, மோக்ஷயிஷ்யாமி மாசுச:'' என்கிற கீதா வாக்யத்தை சிரசா வகித்து நடப்பதே பிறவி சார்த்தகம் என்கிற ஒரே தத்வத்தைத்தான் என் இதயம் நம்பியிருக்கிறது. அதேபோல் அவர்களையும் நம்பவைப்பது தான் எனது முதல் கடமை...அதற்கேதான் என் வாழ்நாளை அர்ப்பணம் செய்துவிட்டேன். அதுதான் எனக்குப் பேரானந்தமாய்...நித்யானந்தமாய் அளவிட்டுக் கூறத்திறமற்ற இன்ப மயமாய் இருக்கிறது...சர்வம் ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்."

என்று கூறினர்...ஆஹாஹாஹா!... இந்த அத்புதமான—ஆணித்திரமான கருத்துக்களையும் நீதிகளையும் கொண்ட பிரஸங்கத்தைக் கேட்டு அப்படியே மெய்மறந்து புலகிதமடைந்தேன். என்னையறியாமலேயே அந்தம்மாளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். அவர்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு ஜீவனுடன் ஒலிக்கின்றது. அவர்கள் செய்துவரும் ஆச்சரியமான தர்மத்திற்கு எல்லோரும் உதவி செய்யுங்கள். அந்த கலியுக மீராபாயை தரிசித்தும் அவர்கள் பகவான்மீது மெய்யன்புடன் பாடும் மதுரகீதத்தைக் கேட்டு ஆனந்தித்தும் இன்பமடையுங்கள். அவர்களிருக்கும் ரமணீயமான இடம் ரிஷியாச்ரமம்

போலிருக்கிறது. வடக்கே வெகு தூரத்திலுள்ள ஸரஸ்வதீபுரத்தில் அந்த கலியுக மீராபாய் வாஸம் செய்கிறார்.

என்பதை முற்றிலும் படிக்கப்படிக்க, முரளியின் இதயத்தில் செய்யும் வேதனை கூறத்திறமில்லை. அவனால் இந்த உணர்ச்சிகளைத் தாங்கமாட்டாது தலை சுழன்றது. அவனையறியாமலேயே அவன் சரீரம் நாகராஜன்மீது சாய்ந்தது.

53

"அம்மணீ! உலகமெல்லாம் உன்னை கலியுக மீராபாய் என்றே போற்றி இதய பூர்வமான அன்புடன் அழைக்கும்போது நான் மட்டும் லக்ஷ்மீ என்கிற உன் புனைப்பெயரை ஏன் அழைக்கவேண்டும்? மீரா என்றே வாய் குளிர மனங்குளிர, இதயம் மகிழ அழைக்கின்றேன்...மீரா...என் செல்வீ...நீ இம்மாதிரி இந்த அல்ப விஷயத்திற்குப் பட்டினி கிடக்கலாமா! உன்னை இக் கதிக்கு ஆளாக்கிய சண்டாளர்களைப் பழிக்குப்பழி வாங்குவது சகஜந்தானே...அதுகூட எனக்கு இன்னும் த்ருப்தியாகவில்லை. அந்தக் கர்ம சண்டாளன், முரளியையும்...

"ஆ!...ஆ!...மாமா!...நிறுத்துங்கள்...நீங்களறியாத தர்ம சாஸ்திரமா நானறியப்போகிறேன்...நீங்கள் படிக்காத சத்விஷயமா நான் படித்திருக்கிறேன், துன்பம் செய்தவர்களுக்கும் இன்பம் செய்வதன்றோ மனித தத்துவத்தின் உயர்ந்த லக்ஷ்யமாகும். பழிக்குப்பழி வாங்குவதில் பலனேது. இன்னும் பாபத்தையல்லவா மூட்டை கட்டவேண்டும்...என்னை இக்கதிக்கு ஆளாக்கியதற்காக நான் அவர்களுக்கு எனது இதய பூர்வமான வந்தனத்தையும் நன்றி விச்வாசத்தையுமல்லவா நான் சமர்ப்பிக்கவேண்டும். அவர்களாலல்லவா நான், என்னப்பன்...என்னுருயிர்க்கண்மணி, ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் திவ்யப்ரபாவத்தை அறியவும் அந்தப் பேரானந்த மதுவை உண்டு வண்டுபோல் ரீங்காரம் செய்யவும் பாச பந்தத்திலிருந்து விலகி பகவானை நம்பும்படியான உறுதி உண்டாகவும் ஏதுவாயிற்று. இதற்கு அவர்களல்லவா எனக்குப் பரம ஆசாரியர்கள். ஆசாரிய உபதேசமாகவல்லவா நான் நினைத்திருக்கிறேன். அந்த நினைப்பிற்கும் இந்த செய்கைக்கும் வெகு முரணாக ஆகிவிட்டதே. நல்ல தெளிந்த ஞான வைராக்யத்துடன் என் மனது ஒரு நிலையில் பண்பட்டு வரும்போது இந்த செய்கையின் விபரீதம் என்னை வாட்டுகிறது. உங்கள் குமாரனும் மருமகளும்கூட ஒத்தாசைக்கு இல்லாத சமயத்தில் அவர்களுக்கு ஆதரிக்க யாரிருக்கிறார்கள் பாவம். தாம்தாம் செய்தவினைக்குத் தாமே வருந்தியனுபவிக்கும் தண்டனையை மாற்ற முடியாது என்று நீங்கள் சொல்லும் தத்துவம் ஒருபுறமிருக்கட்டும். நீங்களாக அந்த அம்மைத் தாயார் பிச்சைக்காரியை பணங்கொடுத்துத் தூண்டி ரகஸியங்களைச் சொல்லிக்கொடுத்து ஆட்டிவைத்திருக்கவேண்டாமே...இதனால் நாம் அடைந்த லாபமென்ன!"

என்று க்ருபாவதி வெகு சாந்தத்துடனும் நீதியுடனும் எடுத்துக் கூறுவதைக் கேட்ட விச்வநாதனின் இதயம் ஆச்சரியத்தால் நிரம்பியது. "மீராபாய்! இத்தனை சிறுவயதில் உன்மனம் பரிபக்குவப்பட்டுக் கடவுளின் சரணமே தஞ்சம் என்ற திடமான நம்பிக்கையிலீடுபட்டுவிட்டதுபோல் என் மனது ஈடுபடவில்லை. அம்மணீ! உன்னுடைய நிழலில் இருப்பதால் ஒரு சிறிது பொறுமை இப்போதுதான் உண்டாகிறது. ஒரே பிடிவாதமாக 'இனி இவ்வுலகத்தின் பாச பந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம். உயிருடன் இருக்கும் நாட்களை பகவத் அர்ப்பணமாகக் கழிக்கத்தான் போகிறேன். இல்லையேல் பட்டினிகிடந்து சாவேன்' என்று நீ அன்று அம்மன் கோவிலில் சொல்லியதால் உன்னிஷ்டப்படியே இத்தனை தூரதேசம் வர ஒப்புக்கொண்டேன்.

இத்தனைக்கும் ஆதிகாரணவேர்ப்புழுகு அந்த ராக்ஷஸிதானேஎன்று நினைக்கும்போது என் சரீரம் பற்றி எரிந்தது. அந்த ஆவேசத்தில் அவளைப் பழி வாங்க எண்ணி அம்மன் சன்னிதியில் வந்தவனையே நான் சரிப்படுத்தி அவள் செய்த பாதகத்தை உலகமறியச் செய்யவேண்டும் என்கிற நோக்கத்தினால் நான் அப்படிச் செய்தேனேயல்லாது அவளுக்குப் பயித்தியம் பிடிக்கும் என்று

நான் நினைக்கவில்லை. நீ சொல்கிறபடி இப்போதும் எனக்குக் கவலையே இல்லை. அவள் கொடிய நாகப்பாம்பின் விஷத்திற்கு ஒப்பான மனுஷியாதலால் அவள் சுயஉணர்வு கலங்கியிருந்தால் இதுபோன்றதீங்குகளாவது செய்யாமலிருப்பாள். ஆகையால் நான் சந்தோஷமே படுகிறேன். அந்தப் பாதகி இனி எக்கேடாவது கெட்டு எருக்கு முளைக்கட்டும். உன் கணவனுக்கும் ஒருபாடம் கற்பிக்கவே நினைத்தேன்... உன்னுடைய பிடிவாதத்திற்கும் பதிபக்திக்கும் அஞ்சி இதை மட்டும் நிறுத்துகிறேன். இப்போதும் பாதகமில்லை. நீ ஒருவார்த்தை சொன்னால், உன் குழந்தையை நான் வரவழைத்துவிடுகிறேன். நீ அதைப் பிரியாது இருக்கலாம். என்ன சொல்கிறாய்?

மீரா:-உம்...குழந்தையாம் குட்டியாம், இனிமேல் இந்த தொல்லைகளெல்லாம் எனக்கெதற்கு!... தேவகி லோகரக்ஷகனாகிய ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைப் பெற்றாள்... அந்த அத்புதக் குழந்தையின் லீலாவினோதங்களைக் கண்டு ஆனந்திக்கவும், அந்த ஆராவமுதைத் தழுவி முத்தமிட்டு உச்சிமோந்து பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி இன்ப சாகரத்தில் திளையவும் ஆயர்குலதிலகமாகிய எசோதைப் பிராட்டிதானே கொடுத்துவைத்திருந்தாள். தேவகிக்கு என்ன கிடைத்தது? ஏதோ பூர்வ கர்மவினையல்லவா குறுக்கிட்டது. சாக்ஷாத் எம்பெருமானைப் பிள்ளையாகப் பெற்ற பாக்யவதிக்கே அப்படியாயின் கேவலம் அநித்யப் புழுகு, உதவாப் பிண்டமாகிய நான வருந்தவேண்டும்? மாமா! பாசபந்தச் சேற்றில் விழுந்து பூசிக்கொள்வது வெகு சுலபம். அந்த அழுக்கைவிட்டு விலகித் துல்லியமாவதுதான் கஷ்டம். இது நீங்களறியாததல்ல...ஏதோ பூர்வஜன்மத்து வாஸனையினாலோ, பெரியார்கள் செய்த ஆசியினாலோ பாபம் நிறைந்த என் பிறவியிலும் ஓரளவு பந்தபாசம் விலகப்பட்டு நிம்மதியடைந்திருக்கும்போது மீண்டும் இத் தொல்லையிலா மாட்டிக்கொள்ளவேண்டும்?

யாருக்கு யார் சாச்வதம் மாமா! நீங்களே யோசித்துப்பாருங்கள். அன்று ஸ்ரீ. பிள்ளைலோகாசாரியர் அருளியுள்ள ப்ரபன்ன பரித்ராணம் என்கிற புத்தகத்தை வாசித்தபிறகு என் மனது பின்னும் துலாம்பரமாகிவிட்டது. நம்போன்ற அநித்யப் பிண்டங்களறிந்துய்யும்பொருட்டல்லவா அந்த மகான் இத்தகைய அபூர்வ க்ரந்தத்தை எழுதிப் புதையல்போல் அளித்திருக்கிறார். பிள்ளையாவது, பெண்ணாவது, இவைகளால் சுகமென்று நினைக்கிறீர்கள்! இவைகளா நம்மை ரக்ஷிக்கும் ரக்ஷகர்கள்? இல்லை... இல்லை.

ப்ராதாக்கள், புத்திரர்கள், மாதா பிதாக்கள், பர்த்தாக்கள் முதலியவர்கள் ரக்ஷகராகமாட்டார்களோ! என்று நினைக்கில் பின்வரும் உதாரணங்களே போதும்.

ப்ராதாக்கள் ரக்ஷகராகமாட்டார்கள் என்கிற தத்துவத்தை வாலி பக்கலிலும் ராவணன் பக்கலிலும் காணலாம். புத்திரர்களும் ரக்ஷகரில்லை என்பதை ருத்திரன்பக்கலிலும் கம்ஸன் பக்கலிலும் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கலாம். மாதா பிதாக்கள் ரக்ஷகரில்லை என்பதை ஹிரண்யன் பக்கலிலும் கைகேயி பக்கலிலும் காணவில்லையா? பர்த்தாக்கள் கூட ரக்ஷகர்கள் இல்லை என்பதைப் பாண்டவர்களிடமும் நளனிடமும் காணலாம்.

என்று லோகாசாரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார். நம்மை ரக்ஷிக்கக் கூடிய ரக்ஷகன் ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே யன்றி மற்ற யாருமே இல்லை. வீணாகப் பந்தத்தில் விழுந்து உழல இனி ஒருபோதும் சம்மதப்படமாட்டேன். அந்த அனித்ய ஆசையை அடியோடு மறந்துவிடுங்கள். அதன் தலைவிதி அது அனுபவிக்கட்டும். முதலில் நான்கூட குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்துவிடவே நினைத்தேன்...என்னப்பன் எனக்கு இப்போது அந்த நினைவைக் கொடுக்கவில்லை. அவன் திருவடி துணை ஒன்றுபோதும் என்கிற நம்பிக்கையைக் கொடுத்துவிட்டான். அதோடு என்மனம் சாந்தியடைந்துவிட்டது இனி இம்மாதிரி பந்தம்

எதுவுமேவேண்டாம். நீங்களும் க்ரூரத்தை விட்டுவிடுங்கள்'' என்று வெகு ஆழமான நம்பிக்கையுடன் கூறினாள்.

அதற்குமேல் விச்வநாதனால் ஏதும் பதிலே சொல்லமுடியாதுபோயிற்று. க்ருபாவதியின் வைராக்யமும் பக்திப் பெருக்கும் திடமான நம்பிக்கையும் அவரை ப்ரமிக்கச் செய்ததோடு, மகத்தான த்ரோகத்தைச் செய்த சதிகாரர்களேயே அவ்வுத்தமி, தனக்குப் பரம ஆசாரியர்கள் என்று கூறிய ஒரு ஆச்சரியமும் மனோபரிபக்குவமும் அவருக்கு ஓர் பாடம் கற்பித்து உபதேசம் செய்ததுபோல இதயத்தில் ஆழமாகப் பதிந்தது.

அவளே தனக்கு உண்மை ஞானத்தை உபதேசம் செய்யவந்த பரம குருவென்றும் அவளே நிகரிலாத ஆசாரியன் என்றும் அவருக்குத் தோன்றியதால் தன்னைத்தானே வெகு கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டார்.

மாதங்கள் சில உருண்டோடின. அவ்வுத்தமியின் வைராக்யமும் பக்தி ப்ரபாவமும் உலகில் ஜகஜ்ஜோதியாய் பரவி, சுடர்விட்டு ப்ரகாசிக்கத்தொடங்கியது. மீராபாய் என்றே ஜனங்கள் அவளை அழைத்துப் பேசவாரம்பித்தார்கள், அவளுடைய மதுரகீதத்தைக்கேட்டு இன்பசாகரத்தில்மூழ்க ஆயிரக்கணக்கான ஜனங்கள்வந்து குழுமினார்கள். கலியுகத்திலும் இத்தகைய புனித ஸ்வருபம் இருக்கிறதா என்று உலகமே வியந்தது.

லக்ஷ்மிபாயை மறுபடியும் எப்படியாவது ரேடியோ நிலயத்திற்கே அழைத்துச்செல்லவேண்டுமென்று வந்த பெரியவர் சகலவிஷயங்களையும் அறிந்து ஆச்சரியமும் திகைப்புமடைந்து அவளது பணத்தைக்கொடுத்துப்பின் தாம் அடிக்கடி உத்ஸவம் ஸேவிக்கவருவதாகக் கூறிச்சென்றார்.

தேசயாத்திரை செய்துகொண்டுவரும் சதாசிவம் இப்போது முற்றிலும் மாறிப்போய் சிவப்பண்டாரம்போலவே ஆய்விட்டார். பற்று என்பதை அறவே முறித்தெறிந்த துறவிக்குள்ள பக்குவம் அவருக்கும் உண்டாகிவிட்டதெனினும் தன்னருமை க்ருபாவதியை அனியாயம்செய்த முரளியையும் பார்வதியையும் மட்டும் அந்த இதயம் சபித்துக்கொண்டே இருப்பதை அவரால் தடுக்கமுடியாது தவித்தார். நாளாவ்ருத்தியில் அதையும் மறந்தார்.

யாத்ராமார்க்கமாய் வரும்போது கலியுகமீராபாயின் விஷயத்தைக்கேள்வியுற்று அங்குசென்றார். அந்தோ பாவம்!...தன்னுயிரையே வைத்துவளர்த்த ஆரணங்கே இங்கு மீராபாயாகத் தோற்றமளிப்பதைக்கண்டு உடல் சிலிர்த்தார். வரண்ட இதயத்திலும் வாத்ஸல்யம் ஊற்றெடுத்துப் பொங்கியது.

எல்லோரும் வழங்கும் மீராபாயென்றே தாமும் அன்புநிறைய வாயார அழைத்து, "செல்வீ மீராபாய்!...உன் பக்தி மலரின் மணம் உலகெங்கும் வீசுகிறது...செல்வீ! மீராபாய் என்றால் யாரோ என்று வந்தேன்...உன் தூய இதயத்தாமரையை அந்த பரந்தாமன் முழுமனத்துடன் அங்கீகரிக்கட்டும். அந்த பாக்யம் ஒன்றுதான் யாருக்கும் கிடைக்காத அபூர்வமான பாக்கியமாகும். அநித்யமான சுகங்களை ஒழித்துப் பேரின்பசுகத்தை இத்தனை சிறு வயதில் உனக்குக் கொடுப்பதற்காகத்தான் பகவான் இத்தகைய லீலைகளைப் புரிந்தான் போலும்.'' என்று அவள்தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார்.

விச்வநாதனும் அசல் ரிஷியைப்போலிருப்பதைக்கண்டும் நடந்த விஷயங்களை கேட்டும் வியப்புக்கடலாடினார்...மீராபாயோ, மாமன் வந்ததற்காகப் புதிய சந்தோஷமோ, உணர்ச்சியோ எதுவுமே அடையவில்லை. ஸ்ரீ க்ருஷ்ணத்யானத்தில் சென்று லயித்துப்போன மனத்திற்கு மற்றஎதுவுமே அதிசயமாகத்தோன்றவில்லை. மாமாவை நமஸ்கரித்தாள். 'என்னால் நீரடைந்த பலன் இதுதான்' என்று மனத்துடன் நினைத்தாள்; வெளியிடவும் விரும்பவில்லை. "இந்த பக்தியில் பண்பட்டநெஞ்சம் மாறுதிருக்கவேண்டுமே'' என்று கண்ணனை இராப்பகல் வேண்டுவதையன்றி மற்ற உலகபாசம் சகலத்தையும் அவளது பரிசுத்தமான இதயம் அறவே ஒழித்தது. இந்த நிலையே தனக்குப் பேரின்பப்பதவியாகத் தோன்றியது.

54

"இன்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் ஜன்மத் திருவிழா நாள். ஸ்ரீ ஜயந்தி... கோகுலாஷ்டமி... கண்ணன் பிறந்தநாள். க்ருஷ்ண ஜயந்தி" ...என்று ஒவ்வொரு வரும் வெகு ஆர்வத்துடன் இதயத்திலிருந்து பொங்கிவரும் பக்தி வெள்ளத்தின் வேகத்தில் சொல்லிக் களித்து உலகமே இன்பசாகரத்தில் மிதக்கின்றது.

பரம ஏழை குடிசையிலும் சரி, பெரிய தனிகரின் பங்களாவிலும் சரி. பலகார விஷயங்களில் சிறிது பேதாபேதமிருக்குமே யன்றி உத்ஸாகத்திலும் பக்தி உணர்ச்சியிலும் ஒன்றுக்கவே காணப்படுகின்றது. இன்னும் கூறப்போனல் செல்வச் செறுக்குடையவர்களின் வீட்டில்தான், தான் அதிகப் பலகாரங்கள் செய்வதாயும் அதைக்கண்டு பிறர் மெச்சவேண்டுமென்றும் ஒரு விபரீத எண்ணம் உண்டாகி அந்த வேகத்தில் பக்தியும் ச்ரத்தையும் குறைந்துபோகிறது.

ஏழைகள் வீட்டிலோ, கூழோ, கஞ்சியோ, தம் சக்திக்குத் தக்கவாறு செய்வதை பக்தியும் ச்ரத்தையுங் காட்டி பகவானுக்குச் சமர்ப்பிப்பதி லீடுபட்டுப் பயனடைவார்கள். அன்று ஒவ்வொரு வீட்டுவாசலிலும் சின்னஞ்சிறுக ஸ்ரீகிருஷ்ணனின் பாதத்தை அழகிய மாக்கோலத்தினல் அலங்கரித்து, மாவிலைத் தோரணங்கள் கட்டி சிங்காரித்திருக்கும் காக்ஷி பக்தர்களின் உள்ளங்களைப் பரவசமூட்டுகின்றது.

கோயிலிலும், மடங்களிலும், பஜனைக்கூடங்களிலும் நடக்கும் ஆரவாரமும் ஆனந்தத் தாண்டவமும் கூறமுடியாது.... சாயங்காலம் அலங்காரமாக தீபம் ஏற்றி வாஸனை வத்திகள் ஏற்றிவைத்து பழவகைகளாலும் மாவிலை முதலியவைகளாலும் தோரணங்கள் கட்டி கோலங்களிட்டு அழகுவெள்ளம் கரை புரண்டுவருவதேபோல் அலங்காரம் செய்திருக்கிறது, இதயத்தில் பக்தியே இல்லாத ஜடங்கள்கூட இந்த அத்புதமான ஸ்ரீ கிருஷ்ண விக்ரகத்தைப் பார்த்ததும் தன்னையறியாத ஒரு புதிய உணர்ச்சியும் பக்தியும் உண்டாகிவிடுமென்ருல் கலியுக மீராபாயின் மனே பரிபக்குவத்தைக் கேட்கவேண்டுமா !

மீராபாய் தானே எசோதையாயும், கோபிகா ரத்தினமாயும் ராதா ருக்மிணியாயும், மனேபாவத்தால் மாறிவிட்டாள். அந்த உத்க்ருஷ்டமான உணர்ச்சியில் கட்டுப்பட்டு அலைமோதும் வேகத்தில் எசோதையாய் கண்ணனைத் தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டிக் கட்டியணைத்து மெய்சிலிர்க்கிருள்.

வெண்ணெயையும் தயிரையும் திருடித் தின்றுவிட்ட கண்ணனை கோபியைப்போல் மிரட்டிக்கண்டிக்கிருள். அன்புததும்ப அபூர்வநாயகியைப்போல் அடிதொழுது ஆலிங்கனம்செய்து இன்பவாரிதியில் ஆழ்ந்து தன்னிரையழிகிருள்.

பாட்டுக்களோ, அந்தந்த சமயத்திற்கு ஏற்றவாறு வாயில் ப்ரவாகம்போல் வந்துகொண்டே இருக்கின்றன. இந்த அபூர்வத்தைக்கண்ட விச்வநாதனும் சதாசிவமும் உள்ளம் கனிந்து ஆனந்தத்தின் தாக்குதலால் கண்ணீர் பொழிந்தார்கள்.

மீராவின் ஆனந்தம் கட்டறுத்துக்கொண்டுவரும் காட்டு வெள்ளம்போல் பொங்கியது. கண்ணனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு எல்லோருக்கும் காட்டி இன்பவாரிதியில் திளைந்தாள். அந்த பவித்திரமான இன்ப மாளிகையில் மெய்ச்சிலிர்ப்புடன் கூடியுள்ள நூற்றுக்கணக்கான கூட்டத்தில் முரளி, நாகராஜன், கண்ணம்மாள், ப்ரேமாமணி, சாவித்திரி ஆகியவர்களும் இருந்தார்கள் என்று அறியும்பொழுது நம் உள்ளங்களே எப்படி வியக்கின்றன !

கண்ணம்மாளின் கண்ணீரை அடக்கமுடியவில்லை. சரீரத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. பறக்கின்றது. இந்த அத்புத நிலையைக் கலைக்கக்கூடாது என்கிற எண்ணத்துடன் வெகு ச்ரமப்பட்டு உட்கார்ந்திருந்தாள். கண்ணம்மாவின் மனதே அங்ஙனம் தவிக்கும்போது முரளியின் இதயத் துடிப்பைக் கூற வேண்டுமா! க்ருபாவதியைப் பார்க்கப் பார்க்க அவன் மனம் குன்றிப்போயிற்று. மீராபாய் சாதாரணப் பெண்ணகத் தோன்றவில்லை. சாக்ஷாத் தெய்வாம்சம் பொருந்திய மீராவாகவே தோன்றியதால் அவளை இனி தான் பழய உறவில் நினைப்பதும் மகா அபசாரம் என்றுகூடத் தோன்றியது. உத்ஸவம் முடியவும்

கூட்டம் கலையவும் துடிதுடித்தவாறு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அத்புதமான பூஜைவேளையில் கரடி புகுந்தது போல் நாம் அவள் நிர்மலமான பூஜையைக் கெடுக்கக்கூடாது என்று பொறுமையுடன் அவளுடைய மதுரகீதத்தைக் கேட்டு இன்பவாரிதியில் மிதந்து கொண்டிருந்தான்.

ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி உத்ஸவம் தீபாராதனையுடன் முடிந்தது. எல்லோருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் ப்ரஸாதம் வழங்கப்பட்டது. கோபிகா ஜீவனஸ்மரணம் கோபிகா...கிருஷ்ணு !...என்கிற ஜெயகோஷத்துடன் பஜனை முடிந்தது. மீராவை ஒரு தெய்வமாகவே எண்ணி எல்லோரும் வணங்கினார்கள். மீரா ஸ்ரீ கிருஷ்ண த்யானத்தில் லீடுபட்டாள்.

இந்த பேரானந்த வைபவத்தைப் பார்க்கப் பார்க்க முரளியின் இதயத்தில் உண்டாகும் உணர்ச்சிகளுக்கு எல்லையே இல்லை. "மீராபாயிக்கு ஜே !... ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஜே !" என்று பொதுஜனங்கள் உணர்ச்சி மேலீட்டால் கூவிக்கொண்டு போவதைப் பார்க்க முரளியின் தேகம் பூராவும் மெய்சிலிர்த்து நடுங்கியது. "நாகராஜா !...நான் போய்விடுகிறேன்...என்னால் நிற்கமுடியவில்லை. கிருபாவதியை நான் பழய மனுஷ்யரூபத்தில் பார்க்கவில்லை...அவள் சத்யமாக தேவாம்சம் பொருந்தியவளாக இருப்பதால்தான் அவள் பிம்பமே எனக்குப் புதிய புதிய உருவமாகத் தோன்றி என் மூளையைக் கலக்குகிறது. சாக்ஷாத் லக்ஷ்மியோ...அல்லது இசைவாணியோ...பராசக்தியோ...மகமாயி தானே...புனிதமான ரிஷிப் பெண்மணியோ...என்றெல்லாம் தோன்றுகிறது. நான் பழயமுறையில் நினைப்பதும் மகா அபசாரம், பெருங் குற்றம் என்று என் மனச்சாக்ஷியே என்னைக் குத்திக்காட்டுகிறது. நண்பா !...பரம பாகவதோத்தமியாய் பதிவ்ருதா ரத்தினமாய் கலியுக மீராவாக விளங்கும் அப்பரிசுத்தவதியின் முகத்தில் விழிக்க நான் அருகதையுள்ளவனல்ல...அல்ல...அல்ல...நான் துராத்மா...பாபப்பிண்டம் என்னைப் பார்த்தாலும் அந்தம்மாளுக்கு பாவமே சேரும். பவித்திரமான ஆனந்த நிலையிலுள்ள அவர்களின் முன்பு நான் மானங்கெட்டுச் சென்றாலும் அவ்வுத்தமி என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாள். இது நிச்சயம். காளிதாஸன் தன் மனைவியை குருவாக எண்ணி நமஸ்கரித்தது போல் நானும் இப்போது போய் பக்தகோடிகளில் ஒருவனாய் நமஸ்கரித்துவிட்டு மரியாதையாகச் சென்றுவிடுவதே நலம்...நாகராஜா...என்னை ஏதோ செய்கிறதே !"...என்று புழுகாய்த் துடித்தான்.

நாகராஜனுக்கும் க்ருபாவதியின் புனர்ஜென்மத்தின் விசித்திரம் இன்னதென்று கூறத்திறமற்ற ஆச்சர்யத்தை யளித்தது. சரித்திர மீராவுக்கும் இந்த உத்தமிக்கும்என்னவித்யாசம்? முற்றிலும் புனர்ஜென்மமல்லவாஎடுத்துவிட்டாள். ஆஹா !...மனது எத்தனை விரைவில் அபூர்வமாகப் பண்பட்டுத் தேறி வைராக்கியக் கோட்டையைக் கட்டிக் கொண்டுவிட்டது!"...என்று வியந்தவாறே பஜனையிலீடுபட்டிருக்கும்போது முரளி சொல்லியதைக் கேட்டு "நண்பா !...அவசரப்படாதே, சற்று இரு. முதலில் குழந்தையை கண்ணம்மாளும் நானும் கொண்டு போகிறோம். புத்திரவாத்ஸல்யத்தின் வேகம் எப்படி இருக்கிறது பார்க்கலாம். பிறகு மற்றதை யோசிப்போம்...கண்ணை உன் கையாலேயே நீயே குத்திக் கொண்டு இனி சூரிய நமஸ்காரம் செய்யவந்தால் என்ன பலன்! இரு...கூட்டம் கலைகிறது. ஆ...அதோ...அந்த பெரியவர் உன் தகப்பனார்தான் அவர் குரல் தெரியவில்லையா......இன்னொருவர் சதாசிவந்தான்...முரளி...நீ செய்த குற்றத்திற்கு முதலில் உன் தகப்பனார் காலில்விழுந்து மன்னிப்புப் பெறு...உம்...ஏன் இந்த அழுகை ?" என்றான்.

இதற்குள் கண்ணம்மாள் குழந்தையுடன் ஓடி கிருபாவதியின் மடியில் குழந்தையைவிட்டுப் பின் தான் சேர்த்துக்கட்டிக்கொண்டாள். மெய்மறந்த க்ருஷ்ணத்யானத்திலிருந்த கிருபாவதி கண்ணைத்திறந்ததும் எதிரிலிருக்கும் கண்ணம்மாளைப்பார்த்து ஒரு சோகச்சிரிப்பு சிரித்தாள். "தீர்க்க சுமங்கலி பவ"...

என்று வாழ்த்திப்பின்...கண்ணம்மா! இந்த அபாக்யவதியை இங்குமா தேடிக் கொண்டு வந்தாய் எல்லோரும் சுகமா?...என்று குசலப்ரச்னம் செய்தாள்.

முற்றுந்துறந்த முனிவர்களையும் விடாதபாசம் இவ்விளம் இதயத்தைமட்டும் விடுமா...ப்ரேமாவைப்பார்த்ததும் தாங்கமுடியாத ஒரு துக்கமே பீறிக்கொண்டு வந்தது. குழந்தையை முத்தமிட்டு உச்சிமோந்தாள்...அடுத்த விநாடியே அவளது வைராக்கியம் தலைசிறந்து தோன்றியதால் குழந்தையை சடக்கென்று எடுத்து "கண்ணம்மா... இந்தா... இதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்...மனித ஜென்மம் எடுத்த ஒவ்வொருவரும் சமுத்திரத்து நீர்போலிருக்கவேண்டும். எப்படி அந்த ஜலத்தின் உப்பைப்பிரிக்கமுடியாதோ, அப்படி பகவத்பக்தியைப் பிரிக்கமுடியா திருக்கவேண்டும். அதேகடலில் உண்டாகிய முத்தோ, பவழமோ, சகலமும் பிரிக் கப்பட்டுப் பிறர்கைக்கு தானேபோய்ச் சேருகிறது. அதேபோலத்தான் யாவும்... உம் அழுகை...என்னைப்பார்த்து அழுகை...வேண்டாம். சாந்தியடையம்மா... என்று பழுத்த ஞானத்துடன் கூறினாள்.

கண்ணம்மாவால் தாங்கவேமுடியவில்லை...விம்மி விம்மி யழுதவாறு... "ஹா!... இதுதானா பதில்?...ஐயோ! இதுவரையில் தவித்தது போதாதா...உன்னை வீட்டிற்கு அழைத்துப்போகத்தானே நாங்கள் வந்திருக்கிறோம்...போனதுபோ கட்டும்... இனி வீட்டிற்கு வரமாட்டாயா?...

என்று முடிப்பதற்குள் மீரா மீண்டும் ஒரு சிரிப்பு கலகலவென்று சிரித் தாள்..."கண்ணம்மா! வீட்டுக்கு வரவேண்டுமா...வீடா எது வீடு...அறம், பொருள், இன்பம், வீடு...என்கிற நான்காவது வீட்டிற்குச்செல்ல நான் வழி கண்டபிறகு நீ நினைக்கும் கூரைவீடு எனக்கு எதற்கு, பயித்தியமே...வீடாவது வாசலாவது? அவைகளெல்லாம் உன்போன்றவர்களுக்குத்தான்...என்போன்ற சன்யாசினிகளுக்கு இனிவேண்டுவது மரணம் ஒன்றுதான்...வீண்பயித்தியம் வேண்டாம்...என்மீது இத்தனை கருணையுடன் என்மாமியாரும் கணவனும் க்ருபைசெய்து உயர்ந்த பதவியில் என்னை வைத்தபிறகு இன்னும் குறை வேறு உண்டா?...போய்வாம்மா! வீட்டிற்குப்போ"...என்று பற்றில்லாமலேயே கூறி விட்டுச் சற்றும் களங்கமோ,கலக்கமோ இல்லாது க்ருஷ்ணனைக்கட்டிக்கொண்டு "கிருஷ்ணா...என்னப்பனே...இந்த லீலை எல்லாம் உன்னுடைய சோதனையின் சாயல்தானே! அபரிமிதமான வைராக்யத்தைக் கொடுத்த நீயே அதைக் கொன்றுவிடாதே...மேல் படிக்கட்டில் ஏற்றிவிட்ட நீயே கீழே தள்ளி வேடிக் கைப் பார்க்காதே, என் மனத்தைத் தளரவிடாதே, தளரச் செய்வாயானால் தக்ஷணமே ப்ராணத்யாகத்தைத் தவிர வேறு இல்லை. இது சத்தியம்...என்று இதய பூர்வமாக ப்ரார்த்தனை செய்தவாறு கண்ணனிடமே ஐக்யமாகிவிட்டாள்.

இதைக் கண்ட கண்ணம்மாளுக்கு வேறு ஒன்றுமே பதில் பேசமுடிய வில்லை. தூரவிருந்து பார்க்கும் முரளியின் மனது எப்படித்தானிருக்கும்? தத் தளிக்கின்றது. தான் எதிரில் சென்று பேசினால் கட்டாயம் அவள் உயிரே போய் விடுமோ என்றுகூட ஒரு திகில் தோன்றியது. அவனால் நிற்கவும் முடியாது சித்திரவதை செய்ததால் "நாகராஜா! நான் போகிறேன்...என்னால் நிற்கமுடிய வில்லை...மகா சண்டாளனாகிய என் முகத்தைப் பார்த்தால் உடனே அந்தம் மாளின் உயிர் போய்விடும்...தான் பெற்ற குழந்தையிடத்திலேயே பாசபந் தத்தை அறுத்தெறிந்துள்ள புனிதவதி இந்த கொடும்பாவியிடத்தில்...அந்தோ... நினைக்கவே பயமாகவிருக்கிறது...என் மனமும் பக்குவமாகிப் பண்படும்காலம் வெகு சமீபத்திலேயே வரும்; அப்போதுதான் வந்து தரிசித்துக்கொள்வேன்... நான் போகிறேன்"...என்று ஓடவாரம்பித்தான்.

இதைத் தற்செயலாகப் பார்த்த மீராவின் கண்களில் கருணையும் தீரமான வைராக்யமும் ஜ்வலித்தன. விச்வநாதனைப் பார்த்து "மாமா! சாந்தத்தை இழக் காதீர்கள்...ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய தரிசனம் செய்வதற்கும் அவனது கிருபைக்குப் பாத்திரமாவதற்கும் எத்தகையோருக்கும் உரிமையும் சுதந்திரமும் உண்டல்லவா! உங்கள் புதல்வரை ஓடாமல் வந்து தரிசனம்

செய்து இன்பத்துடன் போகச் சொல்லுங்கள்'' என்று யாழிசைப்பதுபோல் கூறினது காதில் விழப்பெற்ற முரளி திடுக்கிட்டான். செய்வதறியாது திகைத்துத் துள்ளினான். அடுத்த க்ஷணமே ஓட்டமாக ஓடிவந்து "அப்பா!... என்று பெரிதாகக் கதறிக்கொண்டே தகப்பனாரின் காலில் விழுந்தான். உண்மையில் விச்வநாதனுக்கு முரளியின்மீதுள்ள ஆத்திரம் அளவிட்டுக் கூறமுடியாது பொங்கித்தான் வருகிறது. மீராவின் தூய உபதேசத்தை எண்ணி 'தீர்க்காயுஷ்மான்பவ... என்று ஆசீர்வதித்துப் பின் அதோ... சாக்ஷாத் சர்வலோக பிதா வீற்றிருக்கிறான்; அவனை வணங்கி சாந்தியை அடை' என்றதும்முரளியின்நிலைதடுமாறியது. எழுந்தான். ஸ்ரீகிருஷ்ணனின் திவ்யமங்கள விக்ரகத்தை வணங்கினான். தன் குற்றத்தை மன்னிக்கும்படி மீராவிடம் வேண்டிக்கொள்ள இதயம் பறந்தது. ஆசையால் உள்ளம் விரிந்தது. ஆனால்...அங்கு மீராவைக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். வெட்டவெளியிலே நின்று ஆகாயத்தை உற்றுநோக்கும் மீராவுக்கு ஆகாயத்தில் ஆங்காங்கு கும்பல் கும்பலாகக் கூடியுலாவும் ஒவ்வொரு மேகக்கூட்டமும் ஒவ்வொரு க்ருஷ்ணனாகத் தோன்றி காக்ஷியளித்ததால் அதே அத்புதஉணர்ச்சியில் உலகையே மறந்தாள்... "ஹா...கிருஷ்ணா கிருஷ்ணா! என்று கர்ஜனைசெய்து மனமுருகிக் கண்ணீர்சோர இருகைகளையும் குவித்து இதயம் குழைய "கிருஷ்ணா... இப் பேதையிடத்தில் உனக்குள்ள கருணைதான் என்னே! எத்தனை அன்புடா கண்ணா!'' என்று உருகி,

நம்பினோரைக் காக்கவந்த நாரணனே போற்றி
தும்புராதிகள் துதிக்கும் காரணனே போற்றி
உம்பர் போற்ற நோன்பு நோற்ற கோதை நாதா! போற்றி
அம்புவியின் அவலம் நீக்கி ஆதரிப்பாய் போற்றி.

183088

என்கிற பாடலை வெகு அத்புதமாகத் தன்னை மறந்துபாடும் இசைநாதம் தென்றலில் மிதந்துவந்து எல்லோருடைய செவிகளிலும் விழுந்து பரவசமூட்டியது. தன் முகத்தைப்பார்க்கக் கூசிய கசடனின்முன்பு தான் இப்போதும் நிற்கக்கூடாதென்கிற யோசனையுடன்தான் மீரா சென்றுவிட்டாள் என்பதை முரளியின் உள்ளம் பளிச்சென்று எடுத்துக்காட்டி ஈட்டிபோல் குத்தியது. சற்றுமுன் சமீபத்தில்கேட்ட இன்னிசைக்குரலும் மதுரகீதமும் தூரத்தில்போய்க் கொண்டே இருப்பதைக்கேட்டுத் திடுக்கிட்ட முரளி பித்தன்போல் விழித்தான்.

அங்கு இதுபரியந்தம் இருந்த ஸ்ரீகிருஷ்ண விக்ரகத்தை அவ்விடத்தில் காணவில்லை, அது வெகு உத்ஸாகத்துடனும் சுதந்திரத்துடனும் மீராவின் கரத்தில் வீற்றுமகிழ்வதை தூரவிருந்து கண்டான். இரண்டு ரிஷிகள் போன்ற இருவரும் அவளைப் பின்தொடர்ந்தார்கள். சில பெண்மணிகளும் மீராவின் நிழல்போல் கூடவே நாமாவளிபாடிக்கொண்டு போவதையும் கண்ட எல்லோருடைய உள்ளமும் நெகிழ்ந்துருகி கண்ணீராக வடிந்தது. ப்ருந்தாவனத்தில் நடக்கும் ஸ்ரீகிருஷ்ண உத்ஸவத்திற்காகத் தலைவி போவதாயும் இந்த கிருஷ்ணமந்திரத்தை மற்ற சிஷ்யகோஷ்டிகளைப் பார்த்துக்கொள்ளும்படி, சொல்லிவிட்டுச் சென்றதாயும் அங்குள்ளவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து இவர்களறிந்தார்கள்.

"இனி பட்டம், பதவி, உத்யோகம் ஒன்றுமேவேண்டாம். அனித்யப்பிண்டமெல்லாம் இன்றோடு என்னை விட்டொழியட்டும். நானும் அந்த ப்ருந்தாவன நாதனை தரிசித்து அவன் சரணத்திலீடுபட்டு என் கர்மாவைத் துலைக்கப்போகிறேன்.'' என்று பரபரப்புடன்கூறி முரளியும் ஓடவாரம்பித்தான். நாகராஜன் முதலியவர்களும் உடன்சென்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திவ்யமங்கள விக்ரகத்தைத் தாங்கிச்செல்லும் மீராபாயின் உள்ளம் உலகையே மறந்து கிருஷ்ணனிடமே ஐக்யமாயிற்று. இந்த ப்ரம்மானந்தத்தையும் நித்யகல்யாண வைபவசுகத்தையும் தவிர வேறென்னவேண்டும்? என்னதான் இருக்கிறது!

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

—திருக்குறள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

(14) வை. மு. கோ. — உண்மைச் சித்திரம்
(15) „ — 'இதய ஒலி' (படத்துடன்)

இவ்வளவு அரிய அம்சங்களுடன் மோகினி ஜனவரி இதழ் உங்களுக்குப் பெரும் விருந்தளிக்கும். பக்கங்களும் படங்களும் அதிகமாக்குவதால், செலவும் அபாரமாக ஆகுமென்பது நீங்களறிந்ததே. ஆனல் விலையில் ஒரு அணுதான் அதிகரித்திருக்கிறேம். நேரில் சந்தா செலுத்தாதவர்கள், உள்ளூர் ஏஜண்டிடம் உடனே தங்கள் பிரதிக்கு முன்னதாகவே பதிவுசெய்துகொள்ளுங்கள். உங்களுக்குக்கிடைக்கும் அதிகரித்த அமுதை உத்தேசித்து ஒரு அணு உயர்வைப்பொருட்படுத்தாது வழக்கம்போல் ஆதரிப்பீர்களென்று திடமாய் நம்புகிறேன்.

நந்தவனம்

நந்தவனத்தில் மலர்கள் தினேதினே வளர்ந்துவந்து எல்லோரையும் மகிழ்விப்பதுபோல் மோகினி மலரும் அளவிலும், அழகிலும், அமைப்பிலும் வளர்ந்துவருகிறதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற இதழ் வெளியான பிறகு அன்புடன் நமது மலருக்கு விஷயதானம் செய்துள்ளவர்கள்:

78. ஸ்ரீ உ, வே. பிர்திவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, காஞ்சி.
79. ஸ்ரீ ஆர். வி. அய்யர், பி. ஏ., எம். எல், சென்னை.
80. ஸ்ரீமதி ஜானகி, திருவாரூர்.
81. "அரவிந்தம்" பொள்ளாச்சி

நமது ஸ்ரீ வைஷ்ணவ அன்பர்களுக்கு

ஸ்ரீ உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியை அறியாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருக்கமுடியாது. அவரது அரிய உபன்யாசங்களையும், அவர் சிறப்பாக நடத்திவரும் "க்ரந்தமாலா" ஸஞ்சிகையையும் எல்லோரும் நன்கறிவர். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கென்றே ஒரு விசேஷ வியாசம் அருளியிருப்பதற்கு தண்டன் சமர்ப்பித்து எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது கிருஸ்துவ அன்பர்களுக்கு

பெரும் ஆனந்தம் விளைவிக்கும் புது வருஷப்பிறப்பன்று மோகினி மலரும் ஒரு அத்புதமான விஷயத்தை அன்பளிப்பாகக் கொடுக்கப்போகிருள். உங்களுக்கு நன்கு அறிமுகமான பிரபல எழுத்தாளர் ஷை கட்டுரையை எழுதியுள்ளார். உங்கள் அபிமானத்திற்கும் பாராட்டுகளுக்கும் பாத்திரமான நமது சித்திரக்கலைஞர் அதை நான்கு அழகிய சித்திரங்களுடன் சோபிக்கச்செய்திருக்கிருர்.

நினைவிருக்கட்டும்

1. மலரின் விலையை டிஸம்பரில் அதிகரிக்காதிருக்கும்படி பல வேண்டுகோள்கள் வந்துள்ளன. தினே தினே மலரின் அம்சங்களை அதிக செலவில் அதிகரித்து வருவது எல்லோரும் அறிந்ததே. இருப்பினும் 20-12-43 வரை நேயர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி நவம்பர் திட்டப்படியே நீடித்திருக்கிருேம். 21உ முதல் 3/- வீதம் அனுப்பவேண்டும்.

2. ஜனவரிமுதல் மோகினி 48 பக்கங்களுடனும், சுமார் 10படங்களுடனும் வெளிவருவதால் 4 அணு வீதம் விற்கப்படும். ஆதலால் வருஷ சந்தா அனுப்புவோர் ரூ. 3/- அனுப்பவேண்டுமென்பதைக் கவனிக்கவும்.

3. சந்தாவும், மலரும் சேர்ந்து 5/8-இம்மாதக் கடைசிவரை. மலர் மட்டும் 20-12-43 வரை 2/8; 21-12-43 முதல் ரூ. 3/- சந்தா மட்டும் ரூ. 3/-

வை. மு. கோ.

'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் டீ

M. N. K.—15 TM.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.